பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -292



# விடுதலைப்புலிகளையும்,அமெரிக்காவையும் ஆயுதவழியில் தோற்கடிக்க முடியாது – அதிரும் ஆய்வுகளம்



# கொரோனா தொற்றில் மரணித்த முஸ்லிம்களின் மையத்தை எரிப்பதே நல்லது - வைத்தியர் நௌசான்கான்



# கொரோனா வைரஸ் தொடர்பில் தகவலை வெளியிட்ட வைத்தியர் மர்மான முறையில் மாயம் - அதிரும் தகவல்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# விடுதலைப்புலிகளையும் அமெரிக்காவையும் ஆயுதரீதியில் தோற்கடிக்க முடியாது நிருபனமாகும் கொரோனா வைரஸ்சின் சீனா தாக்குதல் அதிரும் ஆய்வுகளம்

நாட்டில் தற்பொழுது என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை பார்க்கும் பொழுது உலக வரலாற்றிலே ஒரு நாட்டுக்குள் இருந்த ஒரு இயக்கத்தையும் அல்லது ஒரு நாட்டையும் ஆயுத ரீதியாக போரிட்டு வெல்ல முடியாது என்றவொரு நிலைப்பாடும் குறிப்பிட்ட அரசாங்கங்களுக்கு இருக்கிறது. குறிப்பாக இலங்கையை பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆயுத ரீதியாக போராடி வெல்ல முடியாது என்ற கட்டத்தில் தான் அவர்கள் சீனாவினுடைய அமில இரசாயனங்களை பயன்படுத்தி ஈழப்போரின் இறுதி கட்டங்களிலே வெற்றி கொண்டார்கள் என்பது ஆராய்ச்சியின் முடிவில் தெரியவந்துள்ளது.

அந்த அடிப்படையில் உலக வல்லரசாக காட்டிக்கொண்டிருக்கும் அமெரிக்காவையும் கூட ஆயுத ரீதியாக வெல்ல முடியாது என்னவொரு காரணத்தினால் கொரோனா வைரஸினூடாக அமெரிக்க பொருளாதாரத்தையும் அது மட்டுமன்றி உலக நாடுகளின் பொருளாதாரத்தினையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் தற்பொழுது சீன அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. ஒரு அச்சுறுத்தலான நாடாக ஒரு சர்வதிகாரியாக சீனா தன்னை ஏற்படுத்தியிருக்கிறது என்பது இரண்டாவது உண்மையாக இருக்கிறது. ஆகவே விசவாயுக்களை பயன்படுத்தி அந்த பிரதேசத்திலே நோய்களை உருவாக்கி அவர்களின் உடல்களை பலவீனப்படுத்தி இவ்வாறு தான் ஒவ்வொரு நாட்டு அரசாங்கங்களும் சதி செய்கின்றன.

1990, 1992 அதற்கு பிற்பாடு 1995 ஆம் காலப்பகுதியிலும் கூட யாழ்ப்பாணத்திலே மண்டைதீவு கோட்டை அரியாலை மற்றும் கச்சேரி போன்ற பகுதிகளிலே இந்த நாற்றக்குண்டுகளை சகடை புக்காரா போன்ற விமானங்கள் ஊடாக அந்த நாற்ற குண்டுகளை வீசுகின்ற பொழுது சுற்று வட்டத்திலும் கூட யாரும் இருக்க முடியாது. அவ்வளவு தூரத்திற்கு மூக்கினூடாக அந்த சுவாசம் வந்து மயங்கி பலர் விழுந்திருக்கிறார்கள். இவ்வாறு அது குறிப்பிட்ட நாள் வரையிலும் வைரஸ் அந்த இடங்களிலே இருக்கும். அதன் பொழுது தான் தமிழீழ விடுதலைப்புலிகள் அன்று அந்த சகடை விமானங்களை கனோன் போன்ற ஆயுதங்களால் சுட்டு வீழ்த்தினார்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணம் கச்சேரியில் வைத்துதான் அந்த ஆயுதத்தினால் சுட்டார்கள். குறைந்தபுதிவில் வந்துபோடப்பட்ட தாக்குதல் நடத்தப்பட்டபொழுது சகடை புக்காரா விமானங்கள் வீழ்த்தப்பட்டது.

போராட்ட வரலாற்றிலே அதனை மீளவும் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. காரணம் என்னவென்றால் இன்னொருவகையிலே இலங்கைத்தீவை பொறுத்தவரையில் சீனாவோ அல்லது அமெரிக்காவோ இந்தியாவோ உலகத்தில் இருந்த எந்தவொரு வல்லரசு நாடோ இலங்கைக்குள் நெருங்க முடியாதவொரு சூழல் அந்த காலகட்டத்திலே இருந்தது. ஏனென்றால் கடல் வான் தரை என தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கிலும் கிழக்கிலும் இருந்த பிரதேசங்களை தம்வசப்படுத்தியிருந்தனர் என்பது ஒரு வரலாறு. ஆகவே வடகிழக்கு கடற்பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய கடற்புலிகள் மிகவும் பலம் வாய்ந்தவர்களாக அந்த கரையோர பிரதேசங்களின் பாதுகாப்பை அவர்கள் கொண்டிருந்தார்கள்.

ஆகவே இந்த நாடுகளுக்கு எல்லாம் அமெரிக்காவும் கூட தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச அரங்கிலே அதாவது தேசியத் தலைவர் பிரபாகரனுடைய தலைமையில் இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. காரணம் என்னவென்றால் இதுவொரு பலமான இயக்கம். உலக நாடுகளுக்கே சவால் விடக்கூடியதாக இந்த இயக்கம் இருப்பதனால் தங்களுக்கு எதுவுமே செய்யமுடியாத சூழலே காலப்போக்கில் உருவாகும் என்பதே உண்மை.

**57 நாடுகள் இணைந்துதான் இந்த தமிழீழ விடுதலைப்புலிகளுடைய அல்லது தமிழ் மக்களுடைய போராட்டத்தைமுற்றுகைக்குகொண்டு வந்தார்கள் என்பதை நாங்கள் இந்த இடத்திலே ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.** உலகளாவிய ரீதியிலே இருக்கக்கூடிய 200 நாடுகளிலே குறிப்பாக 178 அல்லது 199 நாடுகளுக்கும் இந்த கொரோனா வைரஸ் பரவிவிட்டது.

கொரோனா வைரஸை ஏன் இந்த சீன அரசாங்கம் பரப்பியது அல்லது ஏன் அதை பரப்ப வேண்டியதன் தேவை என்ன என்பது பற்றியெல்லாம் பலமாக ஆராயப்பட்டுக்கொண்டிருக்கிறது அந்தவகையில் காப்பன் என்னும் மருத்துவர் குறித்த வொகான் மத்திய மருத்துவமனையிலே கடைமையாற்றிக் கொண்டிருந்த வேளையிலே காய்ச்சலுடன் ஒருவரை கொண்டுவரும் பொழுது அவரின் மாதிரிகளை எடுத்து ஆராய்ச்சிசெய்யப்பட்ட பொழுது அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டு அதனுடைய பதில் வந்தது. அப்பொழுது அதை கூறக்கூடாது கூறினால் குறித்த மருத்துவர் கொலை செய்யப்படுவார் என்று 2019 ஆம் ஆண்டு அச்சுறுத்தல் விடப்பட்டது. அச்சுறுத்தல் விடப்பட்டபொழுது அந்த செய்தி





இணையதளத்தில் வெளிவந்ததால் இணையதளமும் முடக்கப்பட்டிருந்தது. அதேநேரத்தில் சில நாட்களுக்கு பின்னர் கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டது. அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்ட பல மருத்துவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம்.

எனவே சீனாவுடன் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கம் நற்புறவை ஏற்படுத்திக்கொள்வது என்பது ஆபத்தான கட்டத்தைதான் ஏற்படுத்தும். இதே போன்று ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலே கொத்துக் குண்டுகள் அதாவது விசவாயுக்களை அடித்து போராளிகளின் உயிர்கள் கருகி அமிலங்கள் பட்டு எரிந்த உடல் காயங்கள் இறுதி போராட்டத்திலே கொல்லப்பட்ட போராளிகளின் சடலங்கள்,பொதுமக்களின் சடலங்களை பார்க்கும் பொழுது அந்த எரிஅமிலம் எவ்வாறு செயற்பட்டிருக்கிறது என்பது நன்றாக தெரிகிறது. ஆனந்தபுறவொக்ஸ் சமறிலும் கூட இந்த எரிஅமிலம் வீசப்பட்டது.கெமிக்கல் வெப்பன்ஸ் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த இரசாயன ஆயுதங்களினால் தான் தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிக்க முடியும் என்பதை சீனஅரசாங்கம் அப்பொழுதே விளங்கிக்கொண்டது. சீன அரசாங்கம் மட்டுமல்ல அமெரிக்கா, இந்தியாபோன்றநாடுகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் மிகவும் பலம் வாய்ந்த இயக்கமாகவே அவர்கள் இந்நாட்டில் இருந்திருக்கிறார்கள் என்பது தமிழ் மக்கள் பெருமை கொள்ள வேண்டிய காலகட்டமாக தான் இருக்கிறது.

ஆகவே சர்வதேச பூகோள அரசியலை பார்க்கும் பொழுது ஒருவல்லரசு நாடாக இருந்தாலும் அவர்கள் இந்த நாடுகளுடன் மோதுவதற்கு தயங்குவார்கள். இந்தவொரு நிலைப்பாட்டைதான் தற்பொழுது அமெரிக்காவும் இந்தநாட்டினுடைய சர்வதிகாரி என்றிருந்த காலகட்டம்மாறி அமெரிக்காவினுடைய பொருளாதாரத்தை வீழ்த்தவேண்டும் என்பதும் அங்கு 10 இலட்சம் மக்கள் வரை கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட வேண்டும் என்பதே சீனாவினுடைய நிலைப்பாடு. அதுபோன்று ஆயிரக்கணக்கானோர் இறந்து விட்டார்கள். பல்லாயிரக்கணக்கானோர் தொற்றுக்குள்ளாகியிருக்கின்றார்கள். அவர்களின் உடல்நிலை காலப்போக்கில் எந்த வேலையை செய்வதற்கும் அவர்களை தூண்டுமோ இல்லையோ என்றும் கூட தெரியாது.

இப்படியெல்லாம் அவர்களுடைய நிலைமை மிகமோசமான ஒரு கட்டத்தை எட்டியுள்ளது. தற்பொழுது கொரோனா வைரஸானது 2 அல்லது 3 மாதகாலத்திற்குள் உலகளாவிய ரீதியில் முடிந்துவிடும் என்று நினைக்கவில்லை. இதனுடைய அடுத்த அடுத்த தாக்கமே இன்னுமேவர இருக்கின்றது. ஏனென்றால் சீனா இதை கட்டுப்படுத்ததவறின் இந்த கொரோனா வைரஸ் சீனாவிலிருந்து தான் ஆரம்பிக்கப்பட்டது என்பது நிரூனமாகிறது. சீனநாட்டுக்கு எதிராக அனைத்து நாடுகளும் போர்க்கொடியை தூக்கும் நிலைதான் உருவாகும் என்பதுதான் தற்போதைய காலகட்டத்தில் நடைபெற்று கொண்டிருக்கிற உண்மை. ஏனென்றால் 30ஆண்டுகள் தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டம் இந்த நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருந்த காலகட்டத்திலே ஒரு அடியேனும் இராணுவத்தினரால் இலங்கை அரசாங்கத்தினரால் கைப்பற்ற முடியாதுபோனது. இந்திய அரசாங்கம் வான் தாக்குதல்களை நடத்தியிருந்தது.

சீனஅரசாங்கம் இரசாயன ஆயுதங்களை கொடுத்தது. கடல் கப்பல்களை அமெரிக்கா வழங்கியது சர்வதேச ரீதியாக வந்த விடுதலைப்புலிகளினுடைய 8 கப்பல் தகர்த்துவதற்கும் காரணமாக இருந்தது. ஆகவே இந்த நாடு பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் வலுவான ஒரு இராணுவ கட்டமைப்பு கடல் தரை வான் போன்ற அதனுடைய பலம் தமிழ் மக்களும் இணைந்து தான் இந்த நாட்டை பாதுகாப்பவேண்டிதொருகட்டாயத்துக்குள் தற்பொழுது இந்த இலங்கை தள்ளப்பட்டிருக்கிறது. அனைத்து நாடுகளும்தங்களின்தற்பாதுகாப்புக்களை சரிசெய்யும் நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். சீன அரசாங்கம் இந்த நாட்டிலே காலூன்றி விட்டது. குறிப்பிட்ட காலத்தில் இலங்கை சீன காலணித்தவத்திற்குள் கொண்டுவருவதற்கான சகல நடவடிக்கைகளையும் சீனா எடுத்துள்ளது. எனவே இதில் விழிப்புணர்வுடையவர்களாக இருக்க வேண்டும்.

இன்று ஒருவருடன் ஒருவர் செல்லவோ கதைக்கவோ முடியாது விமான போக்குவரத்து அனைத்தும் தடைப்பட்டுள்ளது இவ்வாறு ஒவ்வொரு நாடுகளிலும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனவே சீனாவினுடைய கொரோனா வைரஸினுடைய ஆராய்ச்சி அதனை பரப்பிவிட்டு ஒரு ஆட்டம் காண வைத்துள்ளது. ஆகவே சீனாவை ஆட்டம் காண வைக்க வேண்டும். அல்லது இலங்கையெனும் தீவிலே மக்கள் வாழ்ந்தார்களா என்ற நிலைப்பாடு உருவாக்கப்படும். அதற்கு எதிர்வரும் அரசாங்கங்களும் சர்வதேச பூகோள அரசியல் புனனாய்வு கட்டமைப்பை உருவாக்கி இதனை எவ்வாறு சரிசெய்யலாம் என்று சீர்தூக்கி பார்க்க வேண்டும் என்பதே இன்றைய காலத்தின் கட்டாயம்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## இலங்கை பொருளாதாரமே இனிவரும் காலத்தில் வைரஸீகளை ஒழிக்கவளி

கொரோனா வைரஸ் தொடர்பான தாக்கங்கள் உலகளாவிய ரீதியில் 200 நாடுகளை கடந்துள்ள நிலையில் இலங்கையில் மட்டுமே பாதிப்புக்கள் குறைவாக காணப்படுகிறது. இருந்தபோதிலும் சீனாவின் வர்த்தக உறவு தொடர்ந்தும் இலங்கையில் இருப்பதால் தொடர்ந்தும் பாரிய அழிவுகளை சந்திக்க வேண்டிய சூழல் உருவாகும். ஆகவே இதனை தடுத்து நிறுத்துவதற்காக என்ன நடைமுறைகளை இந்த அரசாங்கம் எடுக்கப்போகிறது என்ற ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது.

சீனாவை பொறுத்தவரையில் தனது பொருளாதாரத்தையும் சர்வதிகாரத்தையும் உலகளாவிய ரீதியில் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதிலேயே அமெரிக்காவை முந்திக்கொண்டு செயற்படும் ஒரு செயற்பாடாகவே பார்க்க முடிகிறது. ஆகவே சர்வதிகார நாடுகளினுடைய போக்கு என்பது தனது நாட்டினுடைய விதிமுறைகளுக்கமைய நடந்துகொள்ளாவிட்டால் அந்த நாட்டின் மீது பொருளாதார தடை அல்லது அந்த நாட்டுக்கெதிரான சதிகள் இரசாயன தாக்குதல்கள் போன்றவற்றை மேற்கொள்ளும். அது போன்ற ஒரு நடவடிக்கை தான் சீனாவால் தற்பொழுது கொரோனா வைரஸ் அனைத்து நாடுகளுக்கும் பரப்பி விடப்பட்டிருக்கிறது எனலாம்.

இதனை எப்படி நிரூபிப்பது என்று சில காரணங்களை பார்க்கும் பொழுது சர்வதேச ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகளையும் அமெரிக்காவையும் ஆயுத ரீதியாக தோற்கடிக்க முடியாது என்பதே சர்வதேசத்தின் நிலைப்பாடு. 30 ஆண்டுகள் இலங்கையில் இடம்பெற்ற யுத்தமானது பாரிய அழிவை ஏற்படத்தியது. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் சிம்ம சொற்பனமாக திகழ்ந்தார்கள். வீற்றோ பவர் கொண்ட நாடுகளுக்கே தமிழீழ விடதலைப்புலிகள் பெரும் சவாலாக அமைந்தார்கள். கடல் வான் தரை என இவர்களுடைய போராட்ட வளர்ச்சி பாரிய வெற்றி கண்டது.

1990 காலகட்டத்தில் யாழ் குடா நாட்டை கைப்பற்றும் நோக்கில் ஸ்ரீலங்கா அரசு பாரிய நடிவடிக்கையை மேற்கொண்டது. அதன் போது தான் புக்காரா சகடை அப்றோ போன்ற விமானங்கள் மூலம் முதல் தடைவையாக இலங்கையில் நாற்றக்குண்டை வீசினார்கள். இதன் காரணமாக யாழ்ப்பாணத்தை விட்டு பல மக்கள் வன்னிப்பெரு நிலப்பரப்பை நோக்கி இடம்பெயர்ந்தார்கள். பின்னர் குறித்த விமானங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டு விழுத்தினார்கள். அதன் பின்னர் வழமையான நிலைமைக்கு மக்கள் திரும்பினார்கள். அன்றிலிருந்து கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கிலும் கிழக்கிலும் தமது சிவில் நிர்வாகத்தை நடத்தி வந்தார்கள்.

அதன் பின்னர் அமெரிக்காவும் இணைந்து 57 நாடுகளின் உதவியோடு தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தை மௌணிக்கச்செய்தது. இதில் மிக முக்கியமாக சீனாவின் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டது. கொத்துக்குண்டுகள் தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டது. எரி அமிலங்கள் விசப்பட்டது ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் ஈவிரக்கம் இன்றி கொல்லப்பட்டார்கள். இது உலகறிந்த உண்மை.

தற்பொழுதும் அதே போன்றதொரு செயற்பாடு தான் அமெரிக்கா மீதும் உலக பொருளாதாரத்தின் மீதும் சீன அரசாங்கம் கொரோனா வைரஸ் என்ற ஒன்றை விதைத்திருக்கிறது. இதுவரையிலும் 12 இலட்சம் மக்கள் பாதிப்புக்குள்ளாகி 70 ஆயிரம் மக்கள் வரையிலும் கொல்லப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் சீனாவினுடைய செயற்பாடுகளை இலங்கை ஏற்றுக்கொள்ளப்போகிறதா சீனாவை இந்த நாட்டிலிருந்து முற்றாக வெளியேற்றுவதன் ஊடாகவே சீன வைரஸ் தாக்கத்தில் இருந்து தப்பிக்க முடியும்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**99**

இதற்கமைய இவ் வகைப் படைப்பிரிவின் பணி வேறு பிரதேசங்களில் இருக்கின்ற பெரிய குழுக்களின் ஆதரவைக் கொண்டதாக இருக்க வேண்டும். குறிப்பாக முன்வைக்கப்பட்ட தந்திரோபாயப் பணியை நிறைவேற்றுவதற்கான ஏனைய கெரில்லாப் படைப்பிரிவின் செயற்பட்டு உதவியும் ஒத்துழைப்பும் இன்றி விசாலமான நடவடிக்கை சாத்தியமில்லை. இதன் அர்த்தம் யாதெனில் நகர்ப்புறப் பிரதேசங்களில் செயற்படுகின்ற கெரில்லாப் படைப்பிரிவு சுயமாகப் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது. எடுத்துக்காட்டாக தொலைபேசித் தொடர்பைச் சீரழித்தல் பிறிதொரு இடத்தில் நாசகார வேலை மேற்கொள்ளல் அல்லது தனியான பாதையொன்றில் எதிரி ரோந்தின் மீது எதிர்பாராத தாக்குதலைத் தொடுத்தல் போன்றன. இப்பிரதேசக் கெரில்லாப் படைப்பிரிவு அவர்களுக்குத் தரப்படும் பணியை மாத்திரம் துல்லியமாக நிறைவேற்ற வேண்டும். இவர்களது பணியில் தொலைபேசிக் கம்பங்களை அழித்தல் ஆகியன சேர்த்துக்கொள்ளப்பட்டால் அவற்றைச் சீராக நிறைவேற்றுவதைப் படைப்பிரிவு மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படைப்பிரிவின் ஆளணி எண்ணிக்கை நான்கு - ஐந்து பேரைவிட அதிகரித்ததாக இருக்கக்கூடாது. இந்த மட்டுப்படுத்தல் மிக முக்கியமானதாகும். ஏனெனில் நகர்ப்புறப் பிரதேசத்தில் செயற்படுகின்ற கெரில்லாப் படைப்பிரிவை கெரில்லா இராணுவத்தின் செயற்பாட்டிற்குச் சாதகமற்ற பிரதேசத்தில் இருக்கின்ற படைப்பிரிவைப் போலவே பார்க்க வேண்டும். அங்கே எதிரியின் விழிப்புத்தன்மை மிக அதிகமாகவும் அடக்குமுறை நடவடிக்கைகளின் சாத்தியம் கூடுதலானதாகவும் அத்துடன் காட்டிக்கொடுப்பும் இருக்கும் சாத்தியமற்ற இக் காரணியையும் அவசியம் கவனத்திலெடுக்க வேண்டும். அதாவது இச் சூழ்நிலையில் படைப்பிரிவு கடமை செய்ய வேண்டியிருக்கின்ற இடத்திலிருந்து கூடுதல் துரத்திற்குச் செல்லமுடியாது. நுடவடிக்கை இடத்திலிருந்து ஒப்பீட்டளவில் குறைந்த தூரம் மற்றும் பகல்நேர உருமறைப்பு ஆகியனவற்றைக் கருத்திற்கொண்டே படைப்பிரிவினது வேகம் கொண்ட செயற்பாடுகளும் இடம் மாறுதல்களும் இருக்க வேண்டும். இப்படைப்பிரிவு இரவிலேயே பிரதானமாகச் செயற்படுகின்றது. ஏனெனில் கிளர்ச்சிக்கார அமைப்பு மிகப் பெரிதாகும் வரை அதாவது தீவிர செயற்பாட்டுப் படைப்பிரிவைப்போல நகர்ப்புற நடவடிக்கைகளிலும் நகர முற்றுகையிலும் ஈடுபடுமளவிற்கு வரும்வரை படைப்பிரிவு தனது செயற்பாட்டின் முறையை மாற்றுதல் சாத்தியமில்லை.

ஏனைய படைவீரனிடம்



இருப்பதைவிட இப்படைப்பிரிவின் வீரர்களிடமுள்ள ஒழுக்கமும் மனவுறுதியும் மிகவும் உச்சமானதாக இருக்க வேண்டும். உணவுப் பொருட்களை விநியோகிக்கின்ற இரண்டு - மூன்றிற்குட்பட்ட நண்பர்களது வீடுகளை வைத்திருக்க வேண்டும். இவ்வாறான சூழ்நிலைகளில் முற்றுகை என்பது கிட்டத்தட்ட சாவிற்குச் சமனானதாகும். ஏனையவற்றோடு ஒப்பிடுகையில் இப்படைப்பிரிவு தமது ஆயுதத்தாலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. ஆயுதம் இவர்களது சொந்தப் பாதுகாப்பிற்கானதும் வேகமான பின்வாங்கலிற்கும் நம்பகரமான மறைப்பிற்கும் வசதியானதாகும். புடைப்பிரிவின் ஒரு பகுதியினர் ஒரு காபைன், ஒன்றிரண்டு குறுங்குழல் வேட்டைச் சுடுகலன் போன்றவற்றைப் படைக்கலன்களாகக் கொண்டிருக்க வேண்டும். மற்றைய பகுதி அவர்களுக்கு மிகவும் இலகுவான ஆயுதமான கைச்சுடுகலன்களைக் கொண்டிருக்க வேண்டும்.

ஒன்றிரண்டு சிப்பாய்கள் அல்லது எதிரியின் அதிகாரிகள் அல்லது அவர்களது தகவலாளர்களைத் திடீரெனத் தாக்குவதன் மூலம் மாத்திரம் ஆயுதச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். நாசவேலை நடவடிக்கைகள் மேலிடத்து உத்தரவுடன் மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக வெவ்வேறு வகையான கருவிகளை அவசியம் கொண்டிருக்க வேண்டும். பொருத்தமான வாள்கள் கூடியளவு வெடிபொருட்கள், கடப்பாரைகளும் சவள்களும், தண்டவாளங்களைக் கிளப்புவதற்கான சிறப்பான உபகரணங்கள் போன்றன கெரில்லாக்களிடம் இருக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் வேலைக்கு அவசியமான உபகரணத்திரட்டுக்கள் இருக்க வேண்டும். தேவையான நேரத்தில் கையில் கிடைக்கக்கூடியவாறு அவற்றை நம்பகரமாக மறைத்து வைத்திருக்கவும் வேண்டும்.

இவ்வாறான சில படைப்பிரிவுகள் இருக்குமானால் அவை ஒரு கட்டளையாளனுக்குக் கீழ்ப்பட்டவையாக இருக்கின்றன. ஆக்கட்டளையாளன் மக்களிடமிருந்து பழக்கப்பட்ட தொடர்பாளர்களினூடாக இன்றியாமையாத வேலைகளை மேற்கொள்ளத் தலைமைவகிக்கின்றான். சில சமயங்களில் கெரில்லா தனது பொதுத் தொழிலில் ஈடுபடுபவனாகவும் இருக்கலாம். ஆனால் ,து மிகவும் கடினமாகும். ஊண்மையில் நகர்ப்புறப்பகுதியில் செயற்படுகின்ற கெரில்லாப் படைப்பிரிவு சட்டபூர்வமற்ற நிலையில் இருக்கின்ற குழுவைச் சேர்ந்த ஆட்களாவார். நூங்கள் மேலே கூறியதைப் போல அவர்கள் இராணுவக் கட்டமைப்பைக் கொண்டவர்களாகவும் சாத்தியமற்ற சூழ்நிலையில் செயற்படுபவர்களாகவும் உள்ளனர்.

நகர்ப்புறப் பிரதேசக் கெரில்லாப் போராட்டத்தின் முக்கியத்துவம் ஒரு சிலரால் குறைத்து மதிப்பிடப்படுகின்றது. இருந்த போதும் அதனது முக்கியத்துவம் மிகப் பெரியதாகும். பெரிய பிரதேசத்தை உள்ளடக்கி வேண்டிய முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட இப்போராட்டம் கிட்டத்தட்ட பூரணமாகக் குறித்த இடத்துண்டின் வியாபார உற்பத்தி வாழ்வைச் செயலிழக்கச் செய்கின்றது. மக்கள் மத்தியில் அமைதியின்மையையும் அபாயப் பீதியையும் ஏற்படுத்துகின்றது. ஒரு கட்டத்தில் தெளிவற்ற அபாய நிலையை முடிவுக்குக் கொண்டுவரும் தீர்க்கமான செயற்பாடுகள் எடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றிய கருத்தைச் சொல்லி மக்களைச் சமரசம் செய்கின்றது. போரின் ஆரம்பத்தில் முற்கூட்டியே சகலவற்றையும் கணித்து அதற்கேற்ப இப்போராட்ட வகைக்கான நிபுணர்களைத் தயார்ப்படுத்தினால் மின்னல் வேகங்கொண்ட செயற்பாடுகளுக்கு உத்தரவாதமளிக்கலாம். ஆத்துடன் கூடுதலான உயிர்கள் பாதுகாக்கப்படுவதுடன் நாட்டின் விலைமதிப்பான காலமும் மிச்சப்படுத்தப்படும்.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**

# கொரோனா வைரஸ் தொடர்பில் தகவலை வெளியிட்ட வைத்தியர் மர்மமான முறையில் மாயம் – அதிரும் தகவல்

என்னுடைய பெயர் Dr. கைபைன் UHAN மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக இருக்கின்றேன். சாள்ஸ் கொரோனா மீண்டும் வந்திருப்பதை கண்டறிந்தவள் நான் தான். டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி தீவிர காய்ச்சலுடன் ஒரு நோயாளி வந்தார். முதல் கட்ட ஆராய்ச்சியில் அவருக்கு என்ன காய்ச்சல் என்பதை கண்டறிவதில் சிரமமாக இருந்தது. தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து அவரின் உடலில் இருந்து பல மாதிரிகளை சேகரித்து ஆராய்ச்சிக்கு அனுப்பி வைத்தேன். அப்பொழுது தான் அவர் தெற்கு சீனாவிலிருந்து மீன் மார்க்கெட்டிலிருந்து வந்தவர் என்பது தெரியவந்தது. சில நாட்களுக்குப் பின்னர் ஆராய்ச்சியின் முடிவில் அந்த நோயாளிக்கு சார்ல்ஸ் கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது தெரிய வந்தது.

நான் அந்த வார்த்தையை சிவப்பு நிற மையால் குறித்து அதை திருப்பி திருப்பி படித்துப் பார்த்தேன் இது உண்மை தானா என்று. அந்த ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் தொலைத் தொடர்பை ஏற்படுத்தி ஒருமுறை உறுதி செய்து கொண்டேன். அந்த நேரத்தில் தான் நுரையீரல் பிரிவின் தலைமை மருத்துவர் எனது அறைக்கு அருகில் வந்தார். அப்பொழுது நான் அவரிடமும் தகவலை கூறினேன். அவர் என்னிடம் இதை வெளியில் யாரிடமும் கூற வேண்டாம் என எச்சரித்தார். அவர் ஏன் அப்படி சொல்கின்றார் என்பது அப்பொழுது எனக்கு புரியவில்லை.

நான் எனது நண்பரிடம் இந்த தகவலை பகிர்ந்து கொண்டேன். உங்கள் அனைவருக்கும் அவரை நன்றாகவே தெரியும் அவர் தான் முதன்முதலில் கொரோனா வைரஸ் மீண்டும் 2019 இல் வந்திருப்பதை உலகிற்கு அறிவித்தவர். ஆனால் தற்பொழுது அவரும் உயிருடன் இல்லை. லீன் இந்த தகவலை வெளியில் சொன்ன சிலமணி நேரங்களிலே ஊடகங்கள் என் மூலம் தான் இந்த தகவல் வந்தது என்பதை கண்டு பிடித்தார்கள். சீன அரசின் காதுகளுக்கு இந்த தகவல் சென்றது. அவர்கள் காவல் துறைகள் மூலம் தவறான செய்தியை மக்களுக்கு கொண்டு சேர்க்கின்றேன் வதந்தியை பரப்புகின்றேன் என்று என்மீது வழக்கு பதிவோம் என மிரட்டினார்கள். என்னை அமைதியாக இருக்கும் படியும் இது சம்பந்தமாக யாரிடமும் பேசக்கூடாதெனவும் மிரட்டினார்கள்.

ஆரம்ப காலத்தில் நானும் பயந்துகொண்டிருந்தேன். இது பற்றி வெளியில் பேசக்கூடாதென முடிவு எடுத்தேன். என்னுடைய நண்பருக்கும் இதே போன்ற மிரட்டல்கள் இருந்தது. **அப்பொழுது தான் எனது உயிரிற்கு உத்தரவாதம் இல்லை என்பதை அறிந்து கொண்டேன். தொடர்ந்தும் மிரட்டல்கள் வந்து கொண்டே இருந்தது. ஒரு நாள் வீட்டிற்கு சென்று என் உயிருக்கு எப்ப வேண்டுமானாலும் ஏதும் ஆகலாம் எனவே குழந்தையை நீங்கள் தான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினேன். எனக்கு ஒரு வயதில் மகன் இருக்கிறான்.**

இந்த வைரஸின் தாக்கம் தெரியாமல் மருத்துவமனையும் நிர்வாகவும் அரசும் முதலில் மூடி மறைத்தார்கள் அது எனக்கு மிகவும் மனஉழைச்சலை ஏற்படுத்தியது. நான் பார்த்த முதல் 8 நோயாளிகளில் ஒரு தாயிடமிருந்து மகனிற்கு போனது அந்த சிறுவனுக்கு சிகிச்சை பார்த்த



மருத்துவருக்கு அந்த நோய் ஏற்பட்டது பின் அந்த மருத்துவரிடமிருந்து இன்னுமொரு நோயாளிக்கு வைரஸ் பரவியது. இந்த நோயின் தீவிரத்தை கண் முன்னே பார்த்தவள் நான் இது கொரோனா வைரஸ் எனும் உண்மையை வெளியில் சொல்லாமலேயே அனைவரையும் மாஸ்க் போடும்படி வற்ப்புறுத்தினேன்.

அப்பொழுது தான் தெற்கு சீனாவிலிருந்து எனக்கு ஒரு நண்பர் தகவல் கொடுத்தார். இங்கு பலருக்கும் மர்ம காய்ச்சல் ஏற்பட்டுக்கொண்டிருப்பதால் அங்கு வர வேண்டாமென என்னை எச்சரித்தார். அப்பொழுது தான் இந்த சார்ல்ஸ் கொரோனா வைரஸ் நாடு முழுவதும் பரவியிருப்பதை நான் அறிந்தேன்.

**இந்த தகவலை நான் முதலில் பகிர்ந்து கொண்ட மருத்துவர் மற்றும் அவருடைய நண்பர்கள் என பல மருத்துவர்கள் தற்பொழுது உயிருடன் இல்லை. இதுவரைக்கும் நான் பேசாமல் இருந்தது தவறு இனிமேலும் பேசாமல் இருந்தால் இந்த மருத்துவ துறைக்கு நான் செய்யும் துரோகம் என்று சீனாவில் இருக்கும் பீப்பில்ஸ் என்னும் சஞ்சிகைக்கு பேட்டி கொடுத்தார் பெங்.**

இந்த பேட்டி வெளியான சிலமணி நேரங்களில் அனைத்து தளங்களிலும் இந்த பேட்டி அளிக்கப்பட்டது. வேறு சில தலைப்புகளுடன் எழுத்துப்பிழைகளுடன் சீன அரசாங்கம் கண்டு பிடிக்க முடியாத காமினேசன்ஸ்ல இந்த கட்டுரை மறு உருவாக்கம் செய்யப்பட்டு சமூக வலைத்தளங்களில் சீனாவில் பதிவிடப்பட்டது. இந்த பேட்டியிலும் மேலும் பல உண்மைகளை அவர்கள் சொல்கின்றனர். சீனாவில் கம்னீசிய அரசும் பொய் சொல்கின்றனர்.

கொரோனாவை உலகிற்கு டிக்லர் செய்வதற்கு முன்னர் மர்ம காய்ச்சல் என்னும் பெயரில் இது இருந்தது. அந்த மர்ம காய்ச்சலிலே பல ஆயிரம் மக்கள் இறந்து போனார்கள். அவர்களின் எண்ணிக்கை இதுவரை வெளியில் அறிவிக்கப்படவில்லை. அந்த தகவலை வெளியில் சொல்லக்கூடாது என மருத்துவர்களாகிய நாங்களும் மிரட்டப்பட்டிருக்கின்றோம். ஆரம்ப கட்டத்தில் இந்த வைரஸின் தீவிரம் குறித்து பேசிய பல மருத்துவர்கள் வெவ்வேறு காரணத்தினால் கைது செய்யப்பட்டார்கள். நாங்கள் சொன்னதை முன்னரே கேட்டிருந்தால் இந்த வைரஸானது இவ்வளவு தூரம் பரவியிருக்காது ஆரம்பகட்டத்திலேயே தடுத்திருக்கலாம்.

வைரஸை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்ற முயற்சியில் இறங்காமல் சீனாவின் கம்னீசிய பார்ட்டி முதலில் இது அமெரிக்க இராணுவத்தின் சதி என அரசியல் செய்தார்கள். சீன அமைச்சர்கள் சிலர் எப்போது அந்த அமெரிக்கன் மூலம் இந்த வைரஸ் சீனாவிற்குள் வந்தது என்ற பதிவுகளை போட்டு அமெரிக்கா மீது வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார்கள். நீங்கள் பார்ப்பது எல்லாமே சீனாவில் சிகிச்சை கொடுத்துக்கொண்டிருந்த மக்கள் மட்டுமே. சிகிச்சையில்லாமல் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை என்னைப்பொறுத்தவரை தற்பொழுது இருப்பதை விட 10 மடங்கு அதிகம். பலர் சிகிச்சை கொடுக்காமலேயே இறக்கப்பட்டனர். இவர்களுக்கு கொரோனா தான் என உறுதி செய்யாமலே அவர்கள் இறந்து விட்டனர். அவர்களை இந்த கொரோனா பட்டியலிலே சேர்க்கவில்லை. மொத்தமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 40 மடங்கு அதிகமாக இருக்கலாம். ஆரம்பகாலகட்டத்திலே இதை வெளியில் சொன்ன என்னுடைய நண்பர் பெங்லிங் அரசால் மிரட்டப்பட்டு நான் கூறியது பொய் தகவல் என அவர் கைப்பட எழுதி கையெத்து வாங்கியது சீன அரசு. நவம்பர் 26ஆம்திகதிஎன்னால்கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸிற்கு ஜனவரி 22 ஆம் திகதி வரை அரசு மெத்தனம் காட்டியது. என்னைப் பொறுத்தவரை இந்த வைரஸ் நவம்பர் மாதமே உருவாகி இருக்க வேண்டும். நான் சிகிச்சை அளித்த நோயாளி வேறு யாரிடமும் இருந்து வைரஸை வாங்கிக்கொண்டு தான் வைத்தியசாலைக்கு வந்திருக்க வேண்டும். வௌவால் சாப்பிட்டதன் மூலம் இந்த வைரஸ் பரவியிருக்கலாம். ஆனால் அதை என்னால் உறுதியாக கூறமுடியாது. அரசிடம் முதல் நோயாளி தொடர்பான தகவல் இருக்கிறது. ஆனால் அதை அவர்கள் வெளியிட மறுக்கின்றனர்.

ஜனவரி 11 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை உகான்ல CCV காம்பிரன்ஸ் நடைபெற்றது. இந்த காம்பிரன்ஸ் நடைபெறுவதற்காகவே இது மனிதர்களிடமிருந்து மனிதர்களிற்கு பரவும் நோய் இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள். இந்த காலகட்டத்தில் யாரும் பாதிக்கப்படவில்லை என அறிக்கைகளும் தாக்கம் செய்யப்பட்டது. இந்த தகவல்கள் செய்தி தாள்களில் வெளியிடப்பட்டது. அதை பார்த்த மக்கள் பயமின்றி உகானில் சுற்றித்திரிந்தனர். பல மில்லியன் மக்கள் இந்த காலகட்டத்திற்குள் சீனாவின் பல பகுதிகளில் இருந்து உகானிற்கு வந்து சென்றனர். ஆனால் நம்பமாட்டீர்கள் வைரஸ் தொற்று இந்த காலகட்டத்தில் தான் அதிகம் பரவியது.எனக்கு புரிகிறது நான் செய்தது மிகப்பெரிய தவறு இந்த தகவலை நான் முதலிலே வெளி உலகிற்கு கூறியிருக்க வேண்டும். உங்கள் அனைவரையும் எச்சரித்திருக்க வேண்டும். ஆனால் எச்சரிக்க முடியாத சூழ் நிலையில் நான் இருந்தேன். முதலில் அதிகம் பயந்தேன். இத்தனை மக்கள் இறந்ததற்கு நானும் ஒரு காரணமே. இது என்னுடைய தவறும் கூட என்பதையும் கூறிக்கொண்டு வருத்தத்துடன் பேட்டியை முடித்துக்கொண்டார்.

இந்த பேட்டி வெளியான இரண்டு வாரங்கள் ஆகிய நிலையில் பென் பற்றிய எந்த தகவலும் இல்லை. மார்ச் 29ஆம் திகதி அவரின் வீவூ சமூக வலைத்தளங்களில் அதாவது எங்களது ஊரில் டுவிட்டர் மாதிரியான அவர்களின் ஊரில் வீவூ அதில் பதிவு போட்டிருந்தார்.

**அவரின் புகைப்படம் ஒன்றை போட்டு வன் ரிவர் வன் வேர்ச் வன் ரோட் வன் டெல் அவ்வாறான வசனத்துடன் அந்த புகைப்படத்தை போட்டிருந்தனர்.**

ஆனால் அதனை அவர் தான் பதிவு செய்தாரா என்பது தெரியவில்லை. காரணம் இந்த காலகட்டத்தில் பென்னின் பல நண்பர்கள் அவரை தொடர்பு கொள்ள முயற்சி செய்த போதும் கூட பென்னிடம் இருந்துஎந்தபதிலும்வரவில்லை.அவரின் ஒன்லைன் ரெக்கோட் படி ஏப்ரல் 2ஆம் திகதி அதாவது கடந்த வியாழக்கிழமை அவர் ஒரு கோன்பிரன்ஸை அட்டன்ட் பன்னியிருக்க வேண்டும். ஆனால் அந்த கான்பிரன்ஸிற்கு அவர் வரவில்லை. இரண்டு வாரங்களாக பென் பற்றிய எந்த தகவலும் இல்லை. வாரன் சொன்ன கான்பிரன்ஸீம் வரவில்லை. ஒருவேளை இந்த பேட்டி வெளிவந்ததினால் பயத்தில் தலைமறைவாக இருக்கிறாரா அல்லது சீன அரசு ஏதேனும் செய்து விட்டதா என்ற எந்த தகவலும் இல்லை.

இந்தியன்

# கொரோனா தொற்றில் மரணித்தவர்களை அடக்கம் செய்வதா? எரிப்பதா?

வணக்கம் எனது பெயர் Dr. நௌசான்கான் நான் ஒரு அவசர சத்திர சிகிச்சைக்கான விசேட வைத்திய நிபுணர் மற்றும் ஒழுங்கமைப்பு விரிவுரையாளர்

தற்பொழுது நாட்டிலுள்ள பிரச்சனை சம்பந்தமாக விளக்கமளிக்க வேண்டிய நிலையில் நான் இருக்கின்றேன். முதலாவது நான் ஒரு முஸ்லிம் மதத்தை சேர்ந்தவன். 2வது விடயம் நான் ஒரு வைத்தியராகவும் ஸ்பெஷலிட் ஆகவும் நாட்டில் வேலை செய்து கொண்டிருக்கிறேன். 3வது இன்னும் நான் ஒரு இலங்கை நாட்டை சேர்ந்தவன். அதாவது இரட்டை குடியுரிமை உள்ளவர். நான் இலங்கை நாட்டில் பிறந்ததால் இந்த நாட்டு பற்று உள்ளது. இவ்வாறு இந்த மூன்று பொறுப்பும் எனக்கு இருக்கிறது ஆகவே சொல்ல வேண்டிய விடயத்தை சிந்தித்தும் கவனமாகவும் சொல்ல வேண்டிய நிலையில் நான் இருக்கின்றேன்.



**ஏன் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட உயிரிழந்த ஒருவரின் உடலை ஏன் அவரின் உற்றார் உறவினருக்கோ கையளிக்காததன் முக்கிய காரணம் என்ன?** இதற்கான விஞ்ஞான விளக்கம் உலகத்திலுள்ள எந்த நாட்டிலும் அந்த உடலை சொந்தகாரரிடம் பாரம் கொடுக்க முடியாது. அதற்கான காரணங்கள் இருக்கிறது. அதற்கு அடுத்த கட்டமாக உடலை எரிப்பது தொடர்பான விடயத்திற்கு வருகின்றேன். வைரஸ் உடலை பாதிக்கும் பொழுது என்ன நடக்கும் ஒருவர் இறந்தால் அந்த வைரஸ் உடலில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தும் அதன் மூலம் என்ன பாதிப்புக்கள் வரும் என்பதை சொல்லுகின்றேன். மனிதனிற்குள் கொரோனா வைரஸ் வந்து சேரும் பொழுது அவருக்கும் அவரின் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்திக்கும் இடையில் ஒரு சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கும். அதாவது நுரையீரலை தாக்கி மிகவும் கஷ்டமான நிலைக்கு போய்விட்டார் என்றால் அவர் மரணிக்க நேரிடும். மரணிக்கும் வரை வைரஸீம் அவரின் உடலில் இருக்கும் எதிர்ப்பு சக்தியுடன் சண்டையிடும்.

இன்னும் விளக்கமாக சொல்ல வேண்டும் என்றால் அவரின் உடலில் அதாவது வெண்குருதி சிறு துணிக்கை என்று சொல்வோம் அது அந்த இடத்தில் வைரஸீகளுடன் யுத்தத்தில் ஈடுபடும். வைரஸ் வெற்றியடைந்தால் அவர் மரணிக்க நேரிடும். அதே நேரத்தில் நோய் எதிர்பு சக்தி வெற்றி பெற்றால் அந்த வைரஸ்களில் கொஞ்சம் அழியும். வைரஸிற்கு எதிராக நோய்எதிர்ப்பு சக்தி ஒன்று அந்த இடத்தில் உருவாகும். உண்டாக்கப்பட்டால் அந்த எதிர்ப்பு சக்தி அவரின் உடலில் கொஞ்ச காலம் இருக்கும். உடனே அந்த எதிர்ப்பு சக்தி அவரை விட்டு செல்லாது. ஆகவே மீண்டும் அந்த வைரஸ் அவரின் உடலில் தாக்கினால் குறிப்பிட்ட காலத்திற்கு பெரிய தாக்கம் ஏதும் வராது. இந்த இடத்தில் வைரஸ் கூடியளவு தாக்கத்தை ஏற்படுத்தி அந்த இடத்தில் அவரின் எதிர்ப்பு சக்தி தோல்வியடைந்து வைரஸ் வெற்றியடைந்தால் அவர் உயிர் இழக்க வேண்டி ஏற்படும்.

உயிரிழக்கும் அந்த நேரத்தில் என்ன மாற்றம் இடம்பெறும் என்று சொல்லப்போனால் 2 முக்கிய விடயங்கள் நடக்கும். முதலாவது அந்த இடத்தில் எந்தவிதமான எதிர்ப்பு சக்தியும் இருக்காது. ஆகவே ரைவஸானது மிக அதிகளவில்தோன்றும்இலட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் பெருகும். பெருகி உடலின் சகல உறுப்புகளிற்கும் அது சென்றடையும். தொற்றக்கூடிய நிலையில் அந்த வைரஸ் உடல் முழுதும் பரவும். தொற்றக்கூடிய ஆபத்தான நிலையில் அந்த உடலில் இருக்கும். இரண்டாவது விடயம் வைரஸானது இறந்த உடலில் உடல் கட்டமைப்புக்களை மாற்றியமைக்கக்கூடிய ஒரு கொடூரமான வைரஸாகும். இந்த வைரஸ் ஏன் அவ்வாறு மாற்றியமைக்கும் என்றால் இந்த வைரஸ் மனிதனுக்குரிய வைரஸாக இருக்கவில்லை. இது வௌவால் மாதிரியான விலங்குகளில் இருந்து வந்ததே இவ் வைரஸ். சில நாடுகளில் வௌவால்களை சாப்பாட்டிற்கு பயன்படுத்துவதால் அதற்கு பக்கத்தில் வேறு விலங்குகளும் இருப்பதால் மனிதன் அதிகளவில் அவற்றை நுகர்வதால் இறந்த விலங்குகளில் உடலில் அந்த வைரஸ் இருக்கும் பொழுது சில மாற்றங்கள் இடம்பெறும் அந்த வைரஸ் தான் மனித உடலிற்கு தொற்றி வந்திருக்கிறது.

தற்பொழுதுஉடல்ஒன்றுஇறக்கும்பொழுது அந்த இறந்த உடலில் இப்படியானவை இடம்பெறவும்வாய்ப்புக்கள் இருக்கிறது. இந்த இரண்டு காரணங்களாலும் இறப்பு ஏற்பட்டால் அந்த உடலை எந்த காரணத்தாலும் யாரிடமும் உடலை அடக்கம் செய்வதற்கும் கொடுக்க மாட்டார்கள். இது அதற்கான ஒரு விஞ்ஞான விளக்கம். இந்த விடயத்திற்கு என்ன நடக்கிறது என்றால் இவ்வாறான நோயாளர்களை நான் நிறைய பார்த்திருக்கின்றேன். அவ்வாறு நோயாளர்கள் இறந்தால் என்ன செய்வோம் என்றால் நோயாளியின் உடலை பிணவறைக்கு அனுப்புவோம். அந்த உடலை போஸ்மோடம் செய்ய மாட்டார்கள்.

முஸ்லிம்களின் உடலாக இருக்கும் இடத்து அவர்களின் வேண்டுகோளின் நிமித்தம் அந்த உடலை இலேசாக கழுவி விட்டு எந்தவித கிருமிகளும் வெளியில் செல்லாதமாதிரியான ஒரு பை இருக்கிறது அதில் வைத்து அந்த உடலை சீல் பன்னுவார்கள். அதற்கு பிறகு எந்த காரணத்திற்காகவும் யாருக்கும் உடலை காட்ட மாட்டார்கள். பின்னர் இதற்காகன சேவையில்சிலர்இருக்கிறார்கள். அவர்கள் முழுமையான பாதுகாப்பு உடையுடன் அந்த உடலை கொடுப்பார்கள். உடலை அடக்கம் செய்யும் பொழுது முஸ்லிமாக இருந்தால் அந்த இடத்தில் குறிப்பிட்ட இடைவெளி விட்டு தொழலாம். குடும்பத்தை சேர்ந்தவர்கள் 10 பேர் சென்று இடைவெளிவிட்டு தொழலாம் அதில் எந்த பிரச்சனையும் இல்லை. குறிப்பிட்ட சிலர் அதற்காக இருக்கிறார்கள் அவர்கள் அந்த உடலை பெட்டியில் வைத்து எந்தவித லீக்குகலும் இல்லாத விதத்தில் சீல் பண்ணுவார்கள். பின்பு வழமையாக புதைக்கும் ஆழத்தை விட அதிகளவில் அந்த உடலை உரிய முறையில் வைப்பார்கள். கிட்டத்தட்ட 8-10 அடி ஆழத்தில் வைத்தல் வேண்டும். அவ்வாறு அடக்கம் செய்வார்கள். இது இங்கிலாந்தில் செய்யப்படுவது.

ஆனால் இங்கிலாந்திலும் மற்றும் அனைத்து நாடுகளிலும் அதை அடக்கம் செய்யத்தேவையில்லைஎரிக்கலாம்என்று நினைப்பவர்கள் அதை எரிக்கலாம் அதில் எந்த பிரச்சனையும் இல்லை. கட்டாயமாக எரிக்க வேண்டும் என்பது இல்லை. ஆனால் அதில் சொல்லப்பட்டிருக்கும் விடயம் என்னவென்றால் மையத்தை சொந்தகாரரிடமோ வேறு ஆட்களிடமோ கொடுக்க முடியாது. இரண்டாவது விடயம் அந்த மையத்தை அதிக நேரம் வைத்திருக்க முடியாது. வைத்திருக்கும் பொழுது அந்த வைரஸின் பெருக்கம் அதிகமாகும் அது ஆபத்தானது. ஒரு விடயத்தை சிந்திக்க வேண்டும்.நாட்டினே குடிமகனாக இருந்து இது நமக்கு மட்டும் பாதிக்கும் விடயமல்ல. நாட்டிலுள்ள சகல மக்களையும் பாதிக்கும்.

இந்த வைரஸின் சிறப்பம்சம் என்வென்றால் மனிதர்களின் நிறங்கள் இனங்கள் எந்த நாட்டவர் என்பதெல்லாம் தெரியாது எந்த வித்தியாசமும் இன்றி சகலரையும் கொல்லக்கூடியது இந்த வைரஸ். மிகவும் ஆபத்தானது ஆகவே உரிய முறையில் அடக்கம் செய்வதை கவனத்தில் கொள்ளும் பண்பு நாட்டில் அனைவருக்கும் உண்டு அத்தோடு அது . நாட்டின் தலைவருக்கு தான் அது இறுதியாக வந்து சேரும். உலக நாடுகள் அனைத்திற்கும் அது இருக்கிறது. ஆகவே அந்த விடயத்தில் எந்த வகையிலும் மையத்தை பாரம் கொடுக்க மாட்டார்கள் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

உடலை எரிக்காது அடக்கம் தான் செய்ய வேண்டும் என்றால் ஒரு கேள்வி கேட்க வேண்டும். சீல் செய்யக்கூடிய பை அங்கு இருக்கிறதா? அவற்றை கையாள்வதற்கான பயிற்சிவிக்கப்பட்ட ஆட்கள் இருக்கிறார்களா? சீல் பன்னக்கூடிய பெட்டி இருக்கிறதா? போன்றவைகள் சரியான முறையில் நடைமுறையில் இருக்கிறது என்றால் தான் அதை வைத்திருக்கலாம். u.k இல் 35 க்கும் மேற்பட்ட சடலங்கள் இருக்கிறது.அவற்றை அடக்கம் செய்ய பை இல்லாத இக்கட்டான சூழல் தற்பொழுது இருக்கிறது. இந்த நிலையில் இருக்கும் பொழுது அதை வைத்துக் கொண்டிருக்க சிந்திக்க முடியாது அவ்வாறான பிரச்சனை இருக்கிறது. மற்ற நாடுகள் எவ்வாறு நடந்து கொண்டிருக்கிறது என்பதை சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது.

உதாரணத்திற்கு அமெரிக்கா பெரிய ஐஸ் வைத்திருக்கக்கூடிய வாகனத்தில் அந்த உடல்களை முழுமையாக அடுக்குகின்றார்கள் அவற்றை மிக தூரமான இடங்களிற்கு கொண்டு சென்று பாலைவனம் போன்ற இடங்களில் அடக்கம் செய்யக்கூடியவற்றை அடக்கம் செய்கின்றார்கள். எரிக்க கூடியவற்றை எரிக்கிறார்கள். ஸ்பெயின் பிரான்ஸ் போன்ற நாடுகளில் செயற்கையான ஐஸ் கேட்டிங் செய்யக்கூடிய இடங்கள் இருக்கிறது அந்த இடத்தை முழுமையாக அரசாங்கம் எடுத்திருக்கிறது. அங்கு செயற்கையாக ஐஸை உருவாக்கலாம் அந்த ஐஸில் உடலை வைத்து கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொண்டு செல்கின்றனர்.

இவ்வாறான வசதிகள் ஏதாவது இலங்கையில் இருக்கிறதா என்பது கேட்க வேண்டி இருக்கிறது. நாட்டில் மற்றும் உலகத்தில் நாம் பாரிய ஒரு பிரச்சனையில் முகங்கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். இந்த இடத்தில் இனங்களாக பிரிந்தோ சாதிகளாக பிரிந்தோ அல்லது ஒவ்வொரு குழுவாக பிரிந்தோ இப்படியாக சிந்திக்க முடியாது. இதில் இனவாதங்களை பேசி பிரச்சனைகளை உண்டாக்கி அவ்வாறானவற்றை செய்யாது தயவு செய்து சகலரும் இதில் ஒருமித்து இதற்கான முடிவை எவ்வாறு எடுக்கலாம் என சிந்திப்பது அவசியம். சிலவற்றை புத்திக்கூர்மையுடனும் சிந்தித்து சில விடயங்களிற்கு பதிலளிக்க வேண்டிய முடிவு எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம்.

**Dr. நௌசான்கான்**

# கூட்டுப்பயிர்ச்செய்கைக்கான திட்டமிடலை வரும் காலப்போக்கில் அனைவரும் திட்டமிடவேண்டியவர்களாக இருக்கின்றோம் - வைத்திய கலாநிதி சி.சிவமோகன்

**கேள்வி :-** கொரோனா வைரஸ் தொடர்பான ஒரு பரபரப்பான சூழல் ஏற்பட்டிருக்கிறது. 10 இலட்சத்திற்கும் மேல் கொரோனா தொற்றுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையிலும் பலர் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் தொடர்ந்தும் பாரிய அபாயம் ஏற்படப்போவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது. ஆய்வு கூடமொன்றும் அதை உறுதிப்படுத்தியுள்ளது. இதற்கான தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் இடம் பெற்று கொண்டிருக்கும் வேளையிலே நீங்கள் வன்னி மாவட்டத்தை பிரதிபலிக்கின்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் வைத்திய கலாநிதி என்ற வகையிலும் இதற்கு ஒரு கட்டமைப்பை உருவாக்கி அல்லது ஒரு செயலணியை உருவாக்கி அதனூடாக மக்களுக்கு நன்மை பயக்கும் விதமாக அல்லது இதிலிருந்து விடுபடுகின்ற வகையில் என்னென்ன விடயங்களை கையாளலாம் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

**பதில் :-** இரண்டு கிழமைகளை கடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அதாவது கொரோனா பற்றி அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் மக்களை இரண்டு கிழமைகள் விழிப்புணர்வூட்டி வரும் இந்த நேரத்தில் மக்கள் படும் துன்பங்கள் இங்கு வெளிக்காட்டப்பட வேண்டியவை. மக்கள் இரண்டு கிழமைகளை கடக்கும் பொழுதும் கூட உண்பதற்கு உணவில்லை பட்டினி கிடக்கின்றோம் என்றளவு எச்சரிக்கை ஒலிகளை ஒலித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே நாம் இன்று இருக்கும் நிலைமையை எப்படி சமாளிக்கப் போகின்றோம் என்பது ஒரு புறம் இருக்க இனிவரும் காலங்கள் அதாவது இன்னும் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் மூன்று மாதம் அல்லது ஆறு மாதங்கள் கடக்கும் பொழுது நாங்கள் எவ்வாறான துன்பங்களை அனுபவிக்கப்போகின்றோம் என்பதை எமது வட மாகாணம் தமிழர்கள் தாங்களே சொந்தமாகவே சில தீர்மானங்களை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

தற்பொழுது உள்ள அரசை நம்பிக்கொண்டு எமது மக்கள் இவர்கள் தங்களுக்கான நிவாரணங்களை முழுமையாக வழங்குவார்கள் என்று நினைத்து ஏமாறுவதை விட நாமே எம்மை தயார் செய்து கொள்வது இந்த காலத்தில் நல்லது. இதை ஏன் கூறுகின்றேன் என்றால் தற்பொழுது கூட சமூர்த்தி கடன் திட்டத்தினை 10 ஆயிரம் அடிப்படையாக வழங்குகின்றது என்று சொல்லப்பட்ட விடயங்கள் கூட சொல்லப்பட்ட விதத்தில் செயற்படுத்துவதாக இல்லை. ஏனென்றால் அங்கு அவர்களின் இருப்பிலுள்ள பணத்தை அவர்களின் நீண்டகால சேமிப்பில் இருப்பதை தான் வழங்குவதற்கு முற்படுகின்றார்கள் என்பது தான் உண்மை. எனவே இந்த உணவு விடயத்தில் எம்மை நாமே பட்டினிச்சாவிலிருந்து எவ்வாறு தவிர்த்துக்கொள்ளலாம் என்ற விடயத்தில் நாங்கள் மிகவும் சிந்தித்து செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இன்று இந்த கொரோனாவின் தாக்கம் சாதாரணமாக ஒரு கீரை பயிர்ச்செய்கையை செய்யும் மிகவும் சிறிய விவசாயிடமிருந்து மிகப்பெரியளவில் நிறுவனங்களை வைத்து நடாத்தும் அனைவரும் ஒரே வகையில் பாதிக்கப்பட்டிருகிறார்கள். வியாபார நிறுவனங்களை வைத்திருகப்பவர்கள் தங்களின் கையில் பணம் இல்லை என்ற பாரிய ஆதங்கத்தில் இருக்கின்றார்கள். இதுவரை காலமும் வங்கிகளின் ஊடாக தங்களின் நடவடிக்கைகளை அவர்கள் செயல்படுத்திக்கொண்டு வந்திருந்தார்கள். எதிர்கால வருமானத்தை நம்பி சில செயற்பாடுகளை செய்து வந்தார்கள். இன்று வங்கி செயற்பாடுகள் முடக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களின் கையில் எந்தவித தொழிலும் இல்லாத வகையில் பணம் இல்லை என்ற நிலையில் இருக்கின்றார்கள்.

இன்னுமொரு பக்கம் பார்த்தால் அடிப்படை விவசாயிகள், அடிப்படை மீன்தொழில் செய்பவர்கள் அவர்களை பொறுத்தவரையில் அவர்களின் உற்பத்தி தான் இன்று எமது மக்களை காப்பாற்றக்கூடியதாகவே இனிவரும் காலங்களில் இருக்கப்போகின்றது என்பதே உண்மை. எனவே இன்னும் மூன்று மாத காலத்திற்கு பின்னர் எப்படி இந்த பொருளாதார சீர்களை சமாளிக்கப்போகின்றோம் என்றால் அதற்கானவற்றை எமது மக்கள் தற்பொழுதே செய்ய வேண்டும்.

ஒரு வீட்டில் குறைந்தவு தங்களிடம் இருக்கும் தண்ணீர் வழங்களை வைத்துக்கொண்டு ஆகக்குறைந்தளவு பழைய நுளம்பு வலையின் கீழ் கீரை பயிர்ச்செய்கை தொடக்கம் ஒரு சிறிய வீட்டுத்தோட்டம் வரை அவர்கள் தங்களை திட்டமிட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் எதிர்கால பட்டினியில் இருந்து தங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக. வேறு தேவைக்காக இல்லை, தங்களை தாங்களே காப்பாற்றிக்கொள்வதற்காக. கூட்டுப்பயிர்ச்செய்கைக்கான திட்டமிடலை வரும் காலப்போக்கில் அனைவரும் திட்டமிடவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஒரே நேரத்தில் சகலரும் உளுந்து விதைப்பது, வெங்காயம் செய்வது, மிளகாய்கன்றுகள்வளர்ப்பதுமரவள்ளி கிழங்குஉட்படஎன்றநடைமுறைகளை விடுத்து சகல பயிர்ச்செய்கைகளையும் செயற்படுத்தக்கூடியளவு மக்கள் தங்களை திட்டமிட வேண்டும் என்பது தான் இன்றையதேவை. அதற்குமொரு தீர்மானம் எடுத்துள்ளோம் இந்த விடயத்தில்.

இனிவரும் காலத்தில் வெளிநாட்டு உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்யத் தேவையில்லை. எனவே அதற்கான காலம் வருகிறது. தற்பொழுது இந்த மரக்கறி வியாபாரத்தினை செய்தவர்கள், விவசாயம் செய்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இனிவரும் காலத்தில் உள்நாட்டு உற்பத்திகளை நம்பித்தான் நாம் வாழ வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது உள்ளூர் உற்பத்திகளை அடிமட்டத்திலிருந்து எமது மக்களுக்கு செய்ய வேண்டிய ஒரு கட்டாயத்தை மேம்படுத்த வேண்டியவர்களாக



இருக்கின்றோம். அண்மையில் நான் ஒரு விவசாயம் செய்யும் பாலைமோட்டை பிரதேசத்தை சென்று பார்த்தேன் அதற்கு முன்னர் நான் சென்ற பொழுது காடாக இருந்த நிலங்கள் அனைத்தும் பதப்படுத்தப்பட்டு தற்பொழுது வேறு வேறு பயிர்களை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதாவது ஊரடங்கு நேரம் மற்றும் வீட்டில் வேறு தொழில் இல்லை முக்கியமாக வளம் உள்ளவர்கள் இருந்தால் அவர்களே அந்த பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றார்கள்.

அதே போல் அனைத்து தமிழ் மக்களும் தங்களது வீட்டிலே ஒரு பயிர்ச்செய்கையை தங்களால் முடிந்த ஏதாவதொரு உற்பத்தியை நோக்கி நகர வேண்டும். தங்களை தாங்களே காப்பாற்றிக்கொள்வதற்கான திட்டமிடும் செயற்பாடுகளை செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு வெறுமனே அரசாங்கத்திடமிருந்து வரும் என்று கையேந்தி வாழ்வது எமது காலத்திற்கு பொறுந்தாது.

**இதே கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளும் செயற்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். பாரியதொரு பொருளாதார தடையை நீண்ட காலம் செயற்படுத்தியிருந்த பொழுதும் கூட வன்னிப்பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் காலத்தில் யாரும் பட்டினியால் இறந்தார்கள் என்று வரலாறில்லை. சகலரும் உற்பத்தி செய்தார்கள் சகலரும் தொழில் செய்தார்கள் நிம்மதியாக வாழ்ந்தார்கள்.**

சுய உற்பத்தியை வைத்துக்கொண்டு வாழ்ந்தார்கள். அந்த நிலைப்பாட்டிற்கு இன்று வரவேண்டியவர்களாக இருக்கின்றோம். இன்றைய சூழ்நிலையில் எம்மை காப்பாற்றிக்கொள்ள உணவு உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் அனைவரும் இருக்கும் நிலங்களை பயன்படுத்த வேண்டும், கூட்டு முயற்சியில் ஈடுபட வேண்டும், மனித வளங்களை உற்பத்திக்காக செயற்படுத்த வேண்டும். அரசை நம்பி ஏமாந்து பட்டினிச்சாவில் மக்களை தள்ளக்கூடாது.

**கேள்வி :-** நீங்கள் கூறியது அதுவொரு ஆயுதபோராட்ட நிலைப்பாடு, தற்பொழுது நிலவி வருவது கொரோனா வைரஸ். இவ் வைரஸானது பரவி வருவதால் மக்களை வெளியில் இறங்கக்கூடாது என்று வீட்டிற்குள் அடைத்து வைப்பதற்காக ஊரடங்கு சட்டமானது அமுல்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் இது எவ்வாறு சாத்தியப்படுத்தப்படும்? அல்லது நடைமுறைப்படுத்தப்படும்?

**பதில் :-** கொரோனா இருக்கும் பொழுதும் விவசாயம் செய்பவர்களை செய்ய விடுங்கள் என்று தான் சொல்லப்படுகிறது அவர்களுக்கு தடை விதிக்கப்படவில்லை. மீன் பிடிப்பவர்களையும் மீன் பிடிக்க விடுகிறார்கள் அவற்றுக்கான அனுமதிகள் உண்டு. எமக்கான அனுமதிகளை கொண்டு செய்ய வேண்டும் அதை தவறினால் வீட்டிலே இருக்கும் பிரதேசங்களில் உற்பத்திகளாக மாற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதை நீண்டகால அடிப்படையில் கூறுகின்றேன்.

இப் பிரச்சனையானது இன்னும் ஆறு மாத காலங்கள் இழுபடுமாக இருந்தால், எமது மக்கள் பட்டினியால் இறக்கக்கூடாது என நினைத்தால் நாம் நாமாக வாழ வேண்டும். எமது கைகளிலே தங்கியிருக்க வேண்டும். மாற்றான் கைகளில் தங்கியிருக்கும் நிலை மாற வேண்டும். அனைவரும் உற்பத்தியை நோக்கி நாங்கள்எமதுகால்களைதூக்கிவைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இது தான் மக்களின் நிரந்தர தீர்வாக இருக்கும் இந்த பிரச்சனையிலிருந்து வெளியேறுவதற்கு.

**கேள்வி :-** இதுவொரு சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்ட பிரச்சனை. உள்ளூர் உற்பத்திகளை பெருக்க வேண்டும் என்பது ஆரோக்கியமான விடயமாக இருந்தாலும் மீண்டும் இவ்வாறானதொரு தாக்கம் ஏற்படாத வகையிலே இலங்கை அரசாங்கம் என்ன கட்டங்களை எடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு தோற்றுவிக்கப்படுகிறதா?

**பதில் :-** நிச்சயமாக உணவு உற்பத்தியில் நான் கூறிய விடயங்கள் ஒருபுறமிருக்க யாரையும் நம்பி வாழ முடியாது எமது சமூதாயத்தை நல்ல வழியில் திசை திருப்பிவிட வேண்டும் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும். வரும் காலபோக செய்கையில் எம்மை நாமே பாதுகாக்க கூடிய அளவுக்கு பயிர்ச்செய்கைகளில் ஈடுபட வேண்டும். இதுதான் வரும் ஆறு மாதங்களும் ஒரு வருடத்திற்கும் எம்மை காக்கப்போகின்றது என்ற அடிப்படையில் நான் கூறுகின்றேன்.

இரணியன்

# உலக நாடுகளை ஏமாற்றிய சீனா..!! அமெரிக்க உளவுத்துறையின் அறிக்கையில் வெளியான முக்கிய தகவல்!

கொரோனா வைரஸால் நேரிட்ட உண்மையான உயிரிழப்பு மற்றும் பாதிப்பு எண்ணிக்கையை சீனா மறைத்து விட்டதாக அமெரிக்க உளவுத்துறை அறிக்கை அளித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனாவின் பிறப்பிடமான சீனாவை விடஅமெரிக்காவில்உயிரிழப்பும்,பாதிப்பும் அதிகளவில் உள்ளது. இந்நிலையில், அமெரிக்க அரசிடம் கடந்த வாரம் அந்நாட்டு உளவுத் துறை அளித்துள்ள அறிக்கையில், சீனா வேண்டுமென்றே உண்மையான தகவல்களை மறைத்திருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

மேலும், பாதிப்பு மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கை குறித்த சீனாவின் புள்ளி விபரங்கள் போலியானவை எனத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. அமெரிக்க உளவுத்துறை அறிக்கை மிகவும் இரகசியமானது என்பதால் முழு விவரங்கள் தெரியவில்லை. பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அரச அதிகாரிகளே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர். இந்த சூழலில் கொரோனா வைரஸ் பரவல் மற்றும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து சீனா அளித்துள்ள தகவல்களின் நம்பகத்தன்மை குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

வொஷிங்ரனில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சீனாவை விட அமெரிக்காவில் உயிரிழப்புஎண்ணிக்கைஅதிகரித்திருப்பது குறித்து செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.அது தவறான செய்தி என பதிலளித்த ட்ரம்ப், சீனா அளித்துள்ள தகவல்கள் உண்மை தானா என்பது யாருக்கு தெரியும் என்றார்.



மேலும், ஆரம்பம் முதலே கொரோனா வைரஸ் குறித்த தகவல்களை சீனா மூடிமறைக்கவே முயன்றதாகவும், அமெரிக்க உளவுத்துறையும் சீனாவின் புள்ளிவிவரங்கள் குறித்து சந்தேகம் எழுப்பியுள்ளதாகவும் அவர் கூறினார். சீனாவுடன் நல்லுறவு நீடிக்கும் போதிலும், கொரோனா விடயத்தில் சீனா நம்பத்தகுந்த நாடுஅல்லஎனவும்இழைத்துவிட்டதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# கொரோனா: ஒன்றாரியோவில் 15,000 பேர் வரை உயிரிழக்கலாம் என எச்சரிக்கை!




கனடா - ஒன்றாரியோ மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மூவாயிரம் முதல் 15 ஆயிரம் வரையான மக்கள் உயிரிழக்கக் கூடும் என மாகாண சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்று பாதிப்பு 18 மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரை நீடிக்கலாம் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். ஒன்றாரியோவில் கொரோனா தொற்று பரவல் குறித்த மாகாணம் தயாரித்துள்ள திட்டங்களைக் கருத்தில் கொண்டு அவர்கள் இந்தக் கணிப்பீடுகளை வெளியிட்டுள்ளனர்.

ஒன்றாரியோ ஹெல்த் நிறுவனத்தின் தலைவர் மத்தேயு ஆண்டர்சன், ரொரான்டோ பல்கலைக்கழகத்தின் பொது சுகாதாரத் துறை பீடாதிபதி அடால்ஸ்டீன் பிரவுன் மற்றும் ஒன்றாரியோ பொது சுகாதாரத் துறை தலைவரான டாக்டர் பீட்டர் டொன்னெல்லிஆகியோர்வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனை விளக்கினர்.

“நாங்கள் உரிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்திருக்காவிட்டால் ஒன்றாரியோ 100,000 இறப்புகளை சந்தித்திருக்கலாம்” என ஒன்றாரியோ பொது சுகாதாரத்துறை தலைவரான டாக்டர் பீட்டர் டொன்னெல்லி கூறினார். ஆனால் அதிர்ஷ்டவசமாக, நாங்கள் அவ்வாறான மிக மோசமான நிலைக்கும் செல்லவில்லை.இந்த புள்ளிவிவரங்கள் மக்களை பயமுறுத்தக்கூடும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஆனால் துரதிஷ்டவசமாக இதனை நாங்கள் தெரிவிக்கவேண்டியுள்ளது என டொனெல்லி கூறினார்.ஒன்றாரியோவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,350 பேர் சாதாரண மற்றும் பருவகால காய்ச்சலால் இறக்கின்றனர் என்று அவர் கூறினார். ஒரு மோசமான ஆண்டில், 1,500 பேர் வரை கூட இறக்கின்றனர்.

இந்நிலையில் இதனுடன் ஒப்பிடுகையில் கொரோனாவால் இறப்பு பத்து மடங்கு அதிகமாகும். ஏனெனில் இதற்கான தடுப்பு மருந்து இதுவரை இல்லை. குறிப்பிட்ட சிகிச்சையும் இல்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.இவ்வாறான நிலையிலேயே 15,000 இறப்புக்கள் என்ற எண்ணிக்கை முற்றிலும் தர்க்கரீதியானதாகவும் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். மக்கள் வீட்டிலேயே தங்கி உடல் சமூகத் தொலைவைக் கடைப்பிடிப்பதன் மூலம் மாகாணத்தில் பாதிப்புக்களைக் குறைக்க முடியும். எல்லோரும் இது குறித்து பொறுப்புடன் கவனம் செலுத்த வேண்டும் எனவும் டாக்டர் பீட்டர் டொன்னெல்லி கூறினார்.18 மாதங்கள் முதல் இரண்டு ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குள் கொரோனா தொற்று இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலைகளையும் உள்ளடக்கியதாக மாறலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் 18 முதல் இரண்டு ஆண்டுகள் வரையான காலகட்டத்துக்கு தற்போதைய கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் என அவர் கூறவில்லை.சமூக தொலைவு நடவடிக்கைகள் தொடர்பில் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதில் நாங்கள் சற்று விலகியிருக்கிறோம். குறிப்பாக கிரேட் ரொரண்டோ போன்ற சனத்தொகை அடர்த்தி மிக்க பிரதேசங்களிலும் இதுவே நடக்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒன்றாரியோவில் 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த வீதம் 16 சதவிகிதத்திற்கும் குறைவாகவே பதிவாகியுள்ளது என்று மாகாணத்தின் கணிப்புகள் குறிப்பிடுகின்றன. இது உலகளவில் பதிவான இறப்பு வீதத்தை விட சற்றுக் குறைவாக உள்ளது.அத்துடன் 70 வயதுக்குமேற்பட்டவர்களின்இறப்பு10வீதம் என்றும்ஒன்றாரியோபொதுசுகாதாரத்தறை தலைவரான டாக்டர் பீட்டர் டொன்னெல்லி கூறினார்.கிரேட்டர் ரொரான்டோ பகுதியில் வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சை படுக்கைகள் விரைவாக நிரம்பி வருகின்றன. கொரோனா தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மத்திய உள்ளூர் சுகாதார ஒருங்கிணைப்பு வலையமைப்பின் கீழ் உள்ள மெக்கன்சி ரிச்மண்ட் ஹில், மார்க்கம் ஸ்டாஃப்வில்லே, சவுத்லேக், ஹம்பர் ரிவர் மற்றும் நொர்த் யார்க் பொது மருத்துவமனைகள் 153 தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள் உள்ளன. இவற்றில் வெறும் 13 மட்டுமே முக்கியமான பராமரிப்பு படுக்கைகளாக காணப்படுகின்றன.

அத்துடன் மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் வென்டிலேட்டர்களுக்கான அதிக தேவை உள்ளதையும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. ஒரு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் 33 அவசர சிகிச்சை நோயாளிகள் உள்ளனர். ஆனால் அங்கு 26 வென்டிலேட்டர்களே உள்ளன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாகாண அரசின் கையிருப்பில் உள்ள வென்டிலேட்டர்கள் தேவைப்படும் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் என சுகாதார அமைச்சகம் முன்பு கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**தொகுப்பு :- ஹாசினி**



# பிராந்தியச் செய்திகள்



## இரணைமடுவில் தங்கவைக்கப்பட்ட 172 பேர் வீடுகளுக்கு அனுப்பிவைப்பு

கிளிநொச்சி, இரணைமடு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தலுக்காக தங்கவைக்கப்பட்டிருந்த 172 பேர் அன்று(2020.04.04) வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனனர். கடந்த 21ஆம் திகதி இந்தியாவிற்கு சுற்றுலா சென்று நாடு திரும்பியவர்களே இவ்வாறு இரணைமடு விமானப்படை முகாமில் தங்கவைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டனர். அவர்கள் குறித்த முகாமிற்கு அழைத்து வரப்பட்டு 14 நாட்கள் ஆகியுள்ள நிலையில் அன்று பரிசோதனைகள் இடம்பெற்றதையடுத்து விசேட பாதுகாப்பு மற்றும் வாகன வசதிகளுடன் அவ்வந்த பிரதேசங்களுக்கு அன்று (சனிக்கிழமை) அனுப்பிவைக்கப்பட்டனர்.

குறித்த 172 பேரில் ஒரு மதகுரு அடங்கலாக 45 ஆண்களும், 147 பெண்களும் அடங்குகின்றனர். இவர்கள் அன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.குறித்த அனுப்பிவைக்கும் நிகழ்வு அன்று(சனிக்கிழமை) காலை 8 மணியளவில் இரணைமடு விமானப்படை முகாமில் இடம்பெற்றதுடன் குறித்த அனைவரும் இந்தியாவில் கௌதம புத்தர் பிறந்த இடத்தினைப் பார்வையிட்டு வழிபடுவதற்காக சுற்றுலாப் பயணிகளாக சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## கொடிகாமம் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து 233 பேர் விடுவிப்பு!

கொடிகாமம் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து 233 பேர் இன்று(ஞாயிற்றுக்கிழமை) காலை விடுவிக்கப்பட்டுள்ளனர்.வெளிநாடுகளிலிருந்து நாட்டிற்கு திரும்பிய அனைவரும் 14 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.இதன்படி நாட்டின் சில மாகாணங்களில் உள்ள படைமுகாம்களில் குறித்த தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைந்துள்ளன.வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலும் இந்த தனிமைப்படுத்தும் நிலையங்கள் அமைந்துள்ளன.

இதிலும் யாழ்.மாவட்டத்தில் கொடிகாமம் மற்றும் பலாலி படைமுகாங்களில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.இதில் கொடிகாமம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிக்கப்பட்டு வந்த 233 பேர் இன்று காலை விடுவிக்கப்பட்டுள்ளனர்.இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களுக்கு உரியமருத்துவபரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன்,வீடுகளுக்கு திரும்பும் அவர்களை சமூக இடைவெளியினை பேணுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



## இலங்கையை முடக்குவதாக வெளியாகும் தகவல் பொய்யானது

இலங்கையை முழுவதுமாக முடக்குவது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவை என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் அவ்வாறான தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்பதை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களினூடாக பரப்பப்படும் இவ்வாறான வதந்திகளை நம்பி மக்கள் குழப்பமடையத் தேவையில்லை என பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இவ்வாறு வதந்திகளைப் பரப்புவோர் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவ்வாறானவர்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## வீட்டில் இருந்து பணியாற்றுவதற்கான காலமாக அறிவிப்பு – ஜனாதிபதி ஊடகப்பிரிவு

அரச மற்றும் தனியார் இரண்டு துறை ஊழியர்களுக்கான வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கான காலப்பகுதியாக நாளை (திங்கட்கிழமை) முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான வார நாட்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா அபாய வலயங்களாக அடையாளங்காணப்பட்டுள்ள கொழும்பு கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது அமுலிலுள்ள ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை நடைமுறையிலிருக்கும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.



## நாட்டில் பருப்பு, வெங்காயம், டின் மீனுக்கு தட்டுப்பாடு

கடந்த வாரத்தில் இருந்து நாடு முழுவதும் பல பகுதிகளிலில் பருப்பு, வெங்காயம், டின் மீன் போன்ற அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவாமல் இருக்க 21 நாட்கள் இந்தியா முடக்கப்பட்டமையினால் இந்த பற்றாக்குறை ஏற்பட்டது என்றும் இது பருப்பு, சிவப்பு வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய் மற்றும் வேறு சில மசாலாப் பொருட்களின் இறக்குமதியை பாதித்தது என்றும் அறியமுடிகின்றது.

இலங்கைக்கு பருப்பு, சிவப்பு வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய் போன்ற அத்தியாவசிய பொருட்களின் முக்கிய இறக்குமதியாளர்கள் இந்தியாவும் ஒன்றாகும்.இதற்கிடையில், தாய்லாந்தில் இருந்து கொழும்புக்கு டின் மீன் ஏற்றுமதி தொடர முடியாது என கொழும்பு மொத்த விற்பனையாளர்கள் சங்கத்திற்கு அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

எவ்வாறாயினும் இது குறித்து அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் வினவியபோது, “உலகத்தில் தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளமையினால் இந்த பொருட்களை அத்தியாவசிய என வகைப்படுத்த முடியவில்லை. ஏனெனில் அனைத்து இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் பாதிக்கப்பட்டுள்ளன, இது இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மிக மோசமான நிலை என கூறினார்.

இருப்பினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உணவு மற்றும் பிற அத்தியாவசிய பொருட்கள் எந்தவொரு பற்றாக்குறையும் இல்லாமல் சந்தைக்கு செல்வதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு செயலாளர் காமினி செனரத்துக்கு அறிவுறுத்தியிருந்தார்.அதன்படி, சதோச தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களை சந்தையில் விநியோகிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






## கேரளாவில் அஜித்தின் அதிகபட்ச வசூல் படங்கள்



தல அஜித் தமிழ் சினிமாவின் உச்சத்தில இருக்கும் நடிகர். இவர் நடிப்பில் வலிமை படம் மிக பிரமாண்டமாக தயாராகி வருகிறது.

இந்நிலையில் வலிமை படத்தில் அஜித் போலிஸாக நடிக்கவுள்ளது அனைவரும் அறிந்ததே.

இப்படத்தை எப்படியாவது தமிழ், தெலுங்கு மட்டுமின்றி கேரளாவிலும் பெரியளவில் ரிலிஸ் செய்ய முடிவெடுத்துள்ளனர்.

இதற்கு முன்பு கேரளாவில் அதிகம் வசூல் செய்த அஜித் படங்கள என்பதை பார்ப்போம்...

ஆரம்பம்- ரூ 6.5 கோடி

வேதாளம்- ரூ 6 கோடி

விவேகம்- ரூ 5.2 கோடி

என்னை அறிந்தால்- ரூ 5 கோடி

விஸ்வாசம்- ரூ 3 கோடி

நேர்கொண்டபார்வை- ரூ 2.5 கோடி

## முன்னணி நடிகை கீர்த்தி சுரேஷ்க்கு திருமணம்?

நடிகை கீர்த்தி சுரேஷ் தற்போது தமிழ் தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் முன்னணி நடிகையாக திகழ்ந்து வருபவர்.

2018 ஆம் ஆண்டு வெளிவந்த நடிகையர் திலகம் படத்திற்கு கூட இவருக்கு தேசிய விருது கிடைத்தது.

இந்நிலையில் இவருக்கு தற்போது திருமணம் செய்ய இவரது தந்தை சுரேஷ்குமார் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளது.

மேலும் பா.ஜ.க வில் உள்ள ஒரு தொழிலதிபரின் மகனை தான் தனது பெண் கீர்த்தி சுரேஷ்க்கு சுரேஷ்குமார் பார்த்துள்ளதாக நடிகர் மற்றும் பத்திரிகையாளர் பயில்வான் ரங்கநாதன் கூறியுள்ளார். இவை எந்த அளவிற்கு உண்மை என்று நமக்கு தெரியவில்லை.

இதனை குறித்து நடிகை கீர்த்தி சுரேஷ் தான் உறுதியான விளக்கத்தை தரவேண்டும்.



## தனது காதல் குறித்து மனம் திறந்த பிக் பாஸ் பிந்து மாதவி



தமிழ் மாற்று தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் நடித்து வந்தவர் நடிகை பிந்து மாதவி.

இதன்பின் கழுகு, கேடி பில்லா கில்லாடி ரங்கா போன்ற படங்களில் நடித்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார் நடிகை பிந்து மாதவி.

ஆனால் கமல் ஹாசன் அவர்கள் முன் நின்று தொகுத்து வழங்கிய பிக் பாஸ் சீசன் 1ல் போட்டியாளராக கலந்து கொண்டு தன்னை மக்கள் மனதில் இடம் பிடித்தார்.

பிக் பாஸிற்கு பிறகு இவர் சில படங்களில் நடித்து வந்தார். மேலும் ரசிகர்களுடன் இணைந்தே இருப்பதற்காக தனது இன்டகிராம் பக்கத்தில் மிகவும் அக்டிவாகவே இருப்பார்.

இந்நிலையில் ரசிகர் ஒருவர் இன்டாகிராம் பக்கத்தில் "நீங்க சிங்கிள் தானா" என்று கேட்ட கேள்வி அதிர்ச்சி அளிக்கும் வகையில் பதிலளித்துள்ளார்.ஆம் அதில் அவர் கூறியது "எஸ் நான் சிங்கிள் தான்" என்று கூறியுள்ளார்.

## உங்களை சுற்றி இருக்கும் மக்களுக்கு உதவியாக இருங்கள் – அமலாபால்

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையாக இருக்கும் அமலாபால், இதை செய்தால் உலகில் மாற்றம் வரும் என கூறியுள்ளார்.

ஆடை படத்தில் நிர்வாணமாக நடித்து பரபரப்பை ஏற்படுத்திய நடிகை அமலாபால், சமீபத்தில் இந்தி பாடகர் பவ்னிந்தர் சிங்கை திருமணம் செய்து கொண்டார். திருமண புகைப்படங்களை பவ்னிந்தர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டு சிறிது நேரத்தில் நீக்கி விட்டார். இந்த திருமணம் குறித்து சர்ச்சை நடிகை ஸ்ரீரெட்டி, "உங்களுடைய பஞ்சாப் கணவர், உங்களை நன்றாக பார்த்துக்கொள்வார். பஞ்சாபியரை நம்பலாம்" என்று வலைத்தளத்தில் பதிவிட்டு இருந்தார்.

அமலாபால்இந்த நிலையில் கொரோனா பாதிப்பு குறித்து அமலாபால் கூறியிருப்பதாவது:- "கொரோனா தடுப்பு நடவடிக்கையால் பொதுமக்களுக்கு சில சங்கடங்கள் ஏற்பட்டு இருக்கலாம். இந்த இக்கட்டான நேரத்தில் உங்களை சுற்றி இருக்கும் மக்களுக்கு உதவியாக இருங்கள். பால்காரர், வாட்ச் மேன், டிரைவர்களுக்கு உதவி செய்யுங்கள். முன்னாள் பணியாளர்கள் நன்றாக இருக்கிறார்களா? என்று விசாரியுங்கள். எதை சரி என்று நினைக்கிறீர்களோ அதை செய்யுங்கள். இதன் மூலம் உலகில் மாற்றம் வரும்" இவ்வாறு கூறியுள்ளார்.



தொகுப்பு :– ஹாசினி

# இனவாதம் அழிவு வாதமே!

கடந்தவார தொடர்ச்சி...

இந்தியப் படைகளை வெளியேற்ற முடியாமை. பொருளாதாரா நெருக்கடிகள். வேலையில்லாப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமை. இவற்றை வைத்து ஜே.வி.பி மீள் எழுச்சி கொண்டமை என்ற நெருக்கடிகளால் அவர் திணறினார். இறுதியில் வேறுவழியின்றி பிரேமதாஸவிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்து ஒதுங்கிக் கொண்டார். மகிந்த ராஜபக்ஸவின் இரண்டாவது பதவிக்காலமும் அத்தகையதொரு கொந்தளிப்புக் காலமாகவே மாறக்கூடிய நிலையே உண்டு. ஆனால், தன்மைகள், வடிவங்கள், தரப்புகள்தான் மாற்றமடையப் போகின்றன. போரில் பெற்ற வெற்றியைப் பகிர்ந்து கொள்வதற்குப் போட்டியாக ஜெனரல் சரத் பொன்சேகா இப்படித் திடீரென வருவார் என திரு. மகிந்த ராஜபக்ஸவோ ராஜபக்ஸ குடும்பமோ எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனால், அந்த மாபெரும் நெருக்கடியை முறியடித்து அவர் அல்லது அவர்கள் வெற்றியடைந்து விட்டனர். அதுவும் அதிகப் பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் இந்த வெற்றி கிடைத்திருக்கிறது. மகிந்த ராஜபக்ஸ வின் ஆட்சிக்குக் கிடைத்த மகத்தான வரவேற்பு இது என்று அரசாங்கத் தரப்பில் சொல்லப்படுகிறது.

இவர்கள் எல்லோரும் என்னதான் சொன்னாலும் இந்த வெற்றியை நிராகரிப்போரும் இருக்கிறார்கள். இந்த வெற்றியைக் கடுமையாக எதிர்ப்போரும் இருக்கின்றார்கள். இந்த நிராகரிப்பும் எதிர்ப்பும் தனியே எதிர்க்கட்சிகள், எதிரணிகளின் எதிர்ப்பு என்று கொள்ள முடியாது. அது பொதுமக்களின் மன எதிர்ப்பாக இருப்பதை இங்கே நாம் கவனிக்க வேண்டும். இதுதான் இங்கே நமது கவனத்திற்குமுரியது. இந்த எதிர்ப்பு அல்லது அதிருப்திதான் இனிவரும் நாட்களின் இலங்கைத் தீவின் நிலவரமாகவும் அரசியலாகவும் இருக்கப்போகிறது.

இதுதான் ராஜபக்ஸ குடும்பத்தின் எதிர்காலமாகவும் இருக்கப்போகிறது. அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை, எதிர்ப்பை திசை திருப்பிவிடுவதற்கு முன்னர் போர் என்ற தேசிய விவ-காரம் இருந்தது. இப்பொழுது அது இல்லை. முன்னர் எதிர்க்கட்சிகளோ ஊடகங்களோ அரசாங்கத்தின் மீது போர்க்கொடி தூக்கினால், தேசவிரோதக் குற்றஞ்சாட்டி அவற்றை அடக்கிவிடுவதற்கு அரசாங்கத்துக்கு வாய்ப்பிருந்தது. பயங்கரவாதத்துக்கெதிரான போர் என்ற போர்வையில் அரசாங்கத்தை எதிர்ப்போர் எவரின் மீதும் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கு வசதி கிடைத்தது. எத்தகைய ஜனநாயக மறுப்பையும் வெற்றிகரமாகச் செய்யவும் முடிந்தது.

புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற ஒரேயொரு குற்றச் சாட்டுகளின் மூலம் எவரையும் கட்டிப்போடவும் காணாமற்போகச் செய்யவும் கூடியதாக இருந்தது. இதன் மூலம் எத்தகைய அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடிகளையும் திசை திருப்பிச் சமாளித்துக் கொள்வதற்கும் அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் ஆட்சியாளருக்கு கடந்த காலங்களில் போர் என்ற விவகாரம் வாய்ப்பாக இருந்தது. ஆனால், அது இப்போது இல்லை. ஆகவே இன்று மகிந்த ராஜபக்ஸ வெட்ட வெளியில் நிற்கிறார். எதிலும் மறைந்து கொள்ள முடியாத, எதைச் சொல்லியும் திசைதிருப்ப முடியாத ஒரு பகிரங்க வெளியில் நிற்கிறார். அதே வேளை அவருடைய கடந்த காலம் என்பதும் பெரும் பாரங்களையுடையதாகவே இருக்கிறது. குடும்ப ஆதிக்கம், ஊழல், போர்க்குற்றங்கள், ஊடக வன்முறை, ஜனநாயக மறுப்பு என்ற பல விசயங்கள் அவருக்கு இந்தச் சுமையைக் கொடுக்கின்றன. இந்தக் குற்றச்சாட்டு களையெல்லாம் வெற்றி கொண்டு வெளியே அவர் பல மான நிலையில் இருப்பதைப் போலத் தென்பட்டாலும் அவருடைய கட்டமைப்பினுள்ளும் அவரைச் சுற்றியும் அவர் நெருக்கடிக்குள்ளாகித்தானிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்து தென்பகுதியில் இந்தத் தேர்தல் தவறானது என்று நடத்தப்பட்ட 02.02.2010 இல் நடத்தப்பட்ட போராட்டமும் 04.02.2010 இல் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தமையும் இங்கே கவனிக்கத்தக்கன. அதைப் போல இனிவரும் நாட்களில் அவர் எதிர் கொள்ள வேண்டியிருக்கின்ற அபிவிருத்தி, ஜனநாயக மீளமைப்பு, புனர்வாழ்வு, வேலை வாய்ப்புகளை அளித்தல், சம்பள உயர்வு, பொருளாதார உயர்வுக்கான முயற்சிகள், அரசியற் தீர்வு போன்ற முக்கியமான பிரச்சினைகள் எல்லாம் அவருக்கு உவப்பாக இருக்கப் போவதில்லை.

அத்துடன், அடுத்து வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுடன் அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்த தமிழ்க்கட்சிகளும் சற்று விலகியநிலையில், ஒரு புதிய அரசியற் தொடக்கத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதால் சிறுபான்மை மக்களின் அரசியற் போராட்டங்களும் இன்னொரு வடிவத்தில் அதிகரிக்கலாம். (இது, சிறுபான்மைக் கட்சிகள் எப்படிக் கையாளப் போகின்றன என்பதைப் பொறுத்தே இருக்கிறது).

வடக்குக் கிழக்கில் மீள் கட்டுமானம், புனர்வாழ்வு என்பவற்றுக்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது. முன்னரைப்போல இந்தப் பிரதேசத்தை யாருடைய கண்களிலிருந்தும் அரசாங்கம் மறைத்து விட முடியாது. அத்துடன், சர்வதேச ரீதியாகவும் அரசாங்கத்துக்கு ஏகப்பட்ட நெருக்கடிகள் உண்டு. அதிகாரத்துக்கு மீண் டும் வந்திருக்கும் மகிந்த ராஜபக்ஸவுடன் என்னதான் சமரசங்களைச் செய்தாலும் அடிப்படைமுரண்கள் நிழலாகவே இருக்கப்போகின்றன.

இது அபிவிருத்திக்கான உதவிகள், கடன்களில் தாமதங்களை ஏற்படுத்தும். பொதுவாக எந்தத் தரப்பையும் லாவகமாகக் கையாளும் அரசியல் மரபு மகிந்தவின் கூட்டணியிடம் இல்லை என்று சொல்லப்படுவதுண்டு. போரின்போது இந்தக் கரடுமுரட் டுத் தனத்தை பிறர் அனுசரிக்கவே வேண்டியிருந்தது. அதற்குக் காரணம், புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற அவர்களின் தேவைகள். ஆனால், இனிமேல் அந்தமுறைமை சரிப்படாது. ஆனால், இதையெல்லாம் சிலர் வேறுவிதமாகப் பார்க்கிறார்கள்.

மகிந்த ராஜபக்ஸவும் குழு வினரும் இப்போது நெருக்கடி களால் தாம் சூழப்பட்டிருப்பதை நன்கறிவார்கள். இதனால், அவர் களுடைய உளவியல், முன்னரை விடவும் எதிர்நிலையில்



- எச்சரிக்கையுணர்வு அதிகரித்த நிலையில் தான் இருப்பார்கள். அதாவது அபாயங்கள் தங்களை நோக்கி வருவதைத் தடுப்பதற்கான காரியங்களை முற்கூட்டியே செய்ய முனைவார்கள் என்கின்றனர் இவர்கள். எதிர்ப்பாளர்களை மடக்குதவற்கான உபாயங்களில் ஏற்கனவே தேர்ச்சி பெற்றிருக்கும் ராஜபக்ஸ வினர் இந்தத்தடவை அதை உச்சநிலையில் பயன்படுத்துவர் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அப்படியான நிலையில் பொதுமக்களும் எதிரணிகளும் மோசமான எதிர்விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். குறிப்பாக தன் மீது வரும் நெருக்கடியைத் திசை திருப்பி, மக்களின் நெருக்கடியாக மாற்றும் ஒரு உபாயத்துக்கும் ஜனாதிபதி போகக் கூடும். இது நாட்டின் ஜனநாயகத் துக்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்தும். ஆக, இப்போது இரண்டு பக்கமும் கூருள்ள ஒரு கத்தியைப் போன்ற அரசியல் நிலைமையே இலங்கைத் தீவில் உருவாகியிருக்கிறது. இதை மிக நுட்பமாகவும் விவேகமாகவும் கையாள வேண்டிய பொறுப்பில் அரசாங்கத்துக்கு வெளியே இருக்கும் சகல தரப்பினரும் இருக்கின்றனர்.

முன்னைய ஜனாதிபதிகளுக்கு வெளியே இருந்த அதிருப்தியாளர்கள், எதிர்ப்பாளர்களின் மனதிலிருந்த கோபம் வேறு. இப்போதிருக்கும் கோபம் வேறு. இது தீவிரம் நிறைந்தது. காட்டமானது. ஆகவே மக்களை ஒருங்கிணைப்பதற்கு அதிக சிரமப்படப்போவதில்லை.

குறிப்பாக சிறுபான்மைக் கட்சிகள் எதற்கும் அவ சரப்படாமல் களநிலைமைகளைச் சரியாக மதிப்பிட்டு காரியமாற்ற வேண்டிய சந்தர்ப்பம் இது. தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமை தொடக்கம் போரில் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் அந்த மக்களின் வாழ்க்கை தொடர்பான ஏராளம் முக்கிய மையப்பிரச் சினைகள் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் முன்னே இருக்கின்றன.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை பற்றிய சிந்தனை இந்தக் கட்சிகளுக்கு இன்று அவசியம். ஒரு பக்கத்தில் தேசியப் பிரச்சினைகளில் அரசாங்கத்தை தீர்வு நோக்கி அழைத்துச் செல்வது. மறுபக்கத்தில் வடக்குக் கிழக்கின் பிரச்சினைகளில் தேச-ியத் தரப்புகளை அழைத்து வருவது. இந்த இரண்டு வகை-யான அணுகு முறைகள் தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்குத் தேவை-யாக இருக்கின்றன. இதற்கு இந்தக் கட்சிகள் தமக்குள் கடக்க வேண்டிய பல தடைக்கோடுகளை இவை கடக்க வேண்டும். அப்படிக் கடக்கவில்லை என்றால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் என்பது இந்தக் கட்சிகளுக்கான பொறியாகிவிடும். பெரும் நெருக்கடிவளையத்தால் சூழப்பட்டிருக்கும் மகிந்த ராஜபக்ஸ ஒரு போதும் சும்மா இருக்கப் போவதில்லை.

வியூகங்களை வகுப்பதிலும் போர்களை உருவாக்குவதிலும் வெற்றி கொள்வதிலும் அவர் ஒரு ஓயாத மனிதராக இருக்கிறார். அவரைத் தோற்கடிப்பதற்கான கணிதங்களோடு, வியூகம் அமைக்கவுள்ளவர்கள் அவரையும் விட வேகத்தோடும் விவேகத் தோடும் இருப்பது அவசியம். தவிர, அரசு என்ற பலமான ஒரு அதிகார மையம் ஜனாதிபதியின் கைகளில் இருக்கிறது.

எனவே எதிர் வியூகம் என்பது சாதாரணமாக இருக்கப்போவதில்லை. இங்கே வெற்றி தோல்வி என்பது தனி நபர்களுக்கும் மகிந்த ராஜபக்ஸ ஒரு போதும் சும்மா இருக்கப்போவதில்லை.

வியூகங்களை வகுப்பதிலும் போர்களை உருவாக்குவதிலும் வெற்றி கொள்வதிலும் அவர் ஒரு ஓயாத மனிதராக இருக்கிறார். அவரைத் தோற் கடிப்பதற்கான கணிதங்களோடு, வியூகம் அமைக்கவுள்ளவர்கள் அவரையும் விட வேகத்தோடும் விவேகத் தோடும் இருப்பது அவசியம். தவிர, அரசு என்ற பலமான ஒரு அதிகார மையம் ஜனாதிபதியின் கைகளில் இருக்கிறது.

எனவே எதிர் வியூகம் என்பது சாதாரணமாக இருக்கப்போவதில்லை. இங்கே வெற்றி தோல்வி என்பது தனி நபர்களுக்கிடையிலானது - அல்லது அமைப்புகளுக்கிடையிலானது என்று அர்த்தப்படுத்தப்படவில்லை. மாறாக அரசாங்கத்தை மக்களின் நலன்களை நோக்கியும் பிரச்சினைகளை நோக்கியும் பணியவைப்பது.

ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் போரிடுவது என்பதாகவே கொள்ளப்படவேண்டும். இதுதான் இன் றைய நிலையில் இலங்கைத் தீவின் மிகப் பெரிய சவால்களாக கருதப்படுகின்றன. இவையே இலங்கையின் ஆகப் பெரும் அச்சுறுத்தல்களாகவும் எதிர்காலம் குறித்த கவலைகளாகவும் பலருக்கும் இருக்கின்றன.

**இரணியன்**

# தேர்தல் காலம் வந்ததும் புலி வீரர்களா? முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

கடந்தவார தொடர்ச்சி...

இரண்டாம் முறையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தமிழர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கியது. போர்க்குற்ற விசாரணைக்கு சாட்சியங்களைப் பதிவுசெய்யும்படி ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கோரியிருந்தது. போதியளவு சாட்சியங்களைத் தமிழ் தேசிய கூட்டமைப்பு பதிவு செய்துள்ளதாகவும், இனி யாரும் சாட்சியமளிக்கத் தேவையில்லை எனவும், அவ்வாறு சாட்சியமளிப்பது, சாட்சியாளர்களின்உயிருக்குஆபத்தானது எனவும் சுமந்திரன் அறிக்கைவிட்டார். ஆனால், தமிழ் மக்களிடமிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பினரால் சாட்சியங்கள் பெறப்பட்டமைக்கோ, அவை ஐ.நாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டமைக்கோ உரித்தான சான்றுகள் எவையும் வெளிப்படுத்தப்படவில்லை.

தொடர்ந்தும் வடக்கு, கிழக்கில் நடக்கும் திட்டமிட்ட இனப்படுகொலை, காணாமல்போதல் சம்பவங்கள், இனச் சுத்திகரிப்பு, நில அபகரிப்பு, கலாசார சிதைப்பு உள்ளிட்டவை குறித்து சர்வதேச ஊடகநிறுவனங்களும், ஆய்வாளர்களும் அவ்வப்போது ஆதாரபூர்வமான அறிக்கைகளை வெளியிட்டனர். ஆனால், தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்ட கூட்டமைப்பினரிடம் இந்த விடயங்கள் குறித்த எவ்வித புள்ளிவிபரங்களும், அறிக்கைகளும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்கள் தம் சுயமிழந்து சிங்கள தேசியத்துடன் இணைந்துபோக வேண்டும் என்பதற்கான தொடக்கத்தைத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், சுமந்திரனும் தொடக்கிவைத்தார்கள். தமிழர்களின் தனித்துவ அடையாள நிலங்களுல் ஒன்றான யாழ்ப்பாணத்தில் வைத்தே, தமிழர்கள் நிராகரித்து வந்த சிங்கக் கொடியை ஏந்தினார் இரா. சம்பந்தன். அது தொடர்பிலான சர்ச்சைகள் எழுந்தபோது சிங்கக்கொடி தனக்கு விருப்பமான கொடி என விளக்கமும் அளித்தார். 'முட்டாள் தமிழ் சனங்கள்' அதனையும் ஏற்றுக்கொண்டார்கள்.

அதற்கு அடுத்ததாகத் தமிழர்கள் அன்று தொட்டு நிராகரித்து வந்த இலங்கையின் சுதந்திர தினத்தில் கலந்துகொண்டு, தமிழ் அரசியல் பாரம்பரியத்தில் பெரும் அபகீர்த்தியையும் ஏற்படுத்தியது சம்பந்தர் - சுமந்திரன் கூட்டு. எந்தக் கொடியின் கீழ் சிங்கள பேரினவாதம் ஓரணியாகித் தமிழர்களைகொன்றொழித்ததோஅதைத் தூக்கிப் பிடித்துத் தங்களுக்குப் பிடித்த கொடி என்றனர். எந்த நாளில் சிங்களப் பேரினவாத சக்திகள் ஒன்றுகூடி தமிழர்களை அழிப்பதற்கு உறுதிமொழியெடுத்துக் கங்கணம் கட்டி நின்றார்களோ, அந்த தினத்தில் சம்பந்தன் - சுமந்திரன் கலந்துகொண்டு இராஜதந்திரம் என்றனர். இவையனைத்தும் தமிழ் தேசியத்தைத் தலைமை தாங்குவதாக கூறிக்கொள்ளும் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டவை என்பதை மறக்கக் கூடாது.

சமகாலத்தின் இன்னொரு வேலைத்திட்டத்தையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது. ஈழ விடுதலைப் போராட்டத்துக்கும் புலம்பெயர் மற்றும் தமிழக தமிழர்களுக்கும் இருக்கும் தொடர்பு மிக அவசியமானது. தமிழர் அரசியலைத் தீர்மானிக்கும் சக்திகளுல் மிக முக்கிய இடத்தைப் புலம்பெயர் தமிழர்கள் பெற்றிருக்கிறார்கள். இவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த தமிழ் தரப்பொன்றை தமது நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு வருவதையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு வேலைத்திட்டமாகவே முன்னெடுத்து வருகின்றது. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு, தமிழ் தேசிய கூட்டமைப்பு செய்யும் அனைத்துத் தமிழ் விரோத அரசியல் செயற்பாடுகளுக்கும் இராஜதந்திர முகம் கொடுத்துப் பார்க்கச் செய்வது, இவற்றை ஏற்றுக்கொள்ளச் செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளைக் கூட்டமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர். தமிழில் இலகுவாகச் சொல்வதெனில், புலம்பெயர் தமிழர்களுக்கு 'மண்டையைக் கழுவும்' செயற்பாடுகளை கூட்டமைப்பும், அவர்களுக்குச் சார்பான இணையங்களும் மேற்கொண்டு வருகின்றன. இதனை மீறி சுயமான வழியில் சிந்தித்து செயற்படுபவர்களுக்கு சுமந்திரன் 'புலம்பெயர் புலிவால்கள்' என்ற பட்டத்தைக் கொடுத்துக் கௌரவிக்கிறார்.

இவையனைத்தும் இலங்கை ஐக்கியத்தைப் பாதுகாத்து, பிளவுபடாத இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகான தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எனத் தமிழர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என விளக்கம் வேறு அவ்வப்போது சொல்லப்படும்.

## கூட்டமைப்பின் இராஜதந்திரம்

கூட்டமைப்பினர் தமிழர்களைக் கட்டிப்போடும் சொற்களில் மிகப் பிரதானமானது இராஜதந்திரம் என்பதாகும். ஆனால் கூட்டமைப்பில் இராஜதந்திரிகள் இருக்கின்றனரா? அப்படியாயின் அவர்கள் எவ்வகை இராஜதந்திரிகள்? இராஜதந்திரிகளாக செயற்படுமளவுக்கு அவர்கள் துறைசார்சார்ந்த கற்கைகள் எதிலாவது தோற்றியிருக்கிறார்களா?

இந்தக் கேள்விகள் அனைத்துக்கும் பதில் இல்லை.. இல்லைதான். இராஜதந்திரம் எனப்படுவது வாக்கு பெறுவதற்காக நடத்தப்படும் பரப்புரை மேடையல்ல. மக்களைக்கவர்வதற்காகவெளியிடப்படும் பத்திரிகை அறிக்கையுமல்ல. அதற்கென தனியானகற்றைகள்உண்டு. உலகளவில் அதற்கானபிரபலபல்கலைக்கழகங்களும், தனித்தனியான இராஜதந்திர வகைளும் இருக்கின்றன. இலங்கையில் கொழும்பு பல்கலைக்கழத்தில் சர்வதேச உறவுகள் குறித்த சான்றிதழ் கற்கை உண்டு. மற்றையது பண்டாரநாயக்கா சர்வதேச இராஜதந்திர நிலையம் என்ற ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் இராஜதந்திரம் மற்றும் சர்வதேச உறவுகள் குறித்து சான்றிதழ் கற்பித்தலை வழங்குகின்றன. இவற்றில் கூட கூட்டமைப்பின் உறுப்பினர்கள் யாராவது ஒருவர் கற்றுத் தேறியமைக்கு சான்றுகள் இல்லை. ஆனால், உலகளவில் அதிக கவனத்தைப் பெற்ற படிப்புகளுல் இராஜதந்திரம் மற்றும் சர்வதேச உறவுகள் இருக்கின்றன. தமிழில் இந்தத் துறைகளைத் தெரிவுசெய்து படிப்பவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இனிவரும் காலத்துத் தலைமுறைகள்தான் இந்த மாதிரியான, மிகவும் அவசியமான துறைகளில் கல்வி கற்க முன்வரவேண்டும். தமிழர்களின் இராஜதந்திர மற்றும் சர்வதேச கற்கை



குறித்த கல்வி அறிவு இப்படியிருக்க, கூட்டமைப்பினர் எங்கிருந்து இராஜதந்திரத்தைக் கற்றனர். எவ்வகை இராஜதந்திரத்தில் தேர்ச்சி பெற்றனர்? வெள்ளைத் தோல் அதிகாரிகளைத் தூதுவராலயங்களில் சந்திப்பதும், கைகுலுக்குவதும் இராஜதந்திர நடவடிக்கையாகக் கொள்ள முடியாது. அது மாதிரியான சம்பவங்கள் அனேக இடங்களில் தகவல் பெறுதலுக்கும், அறிக்கை கையளித்தலுக்குமே நடக்கும்.

இதேபோல இந்திய அரசின் நிகழ்ச்சி நிரலில் இயங்குவதற்கும் பெயர் இராஜதந்திரமல்ல. இந்தியாவின் சார்பில் நின்று பார்த்தால் அது இந்தியாவுக்கு இராஜதந்திரம். இந்தியாவின் நிகழ்ச்சி நிரலை கேட்டு இயங்குவதற்குத் தமிழர்கள் எப்படி இராஜதந்திரம் என அர்த்தம் கொடுக்க முடியும். இந்தியாவிடம் பணத்தை வாங்கிக் கொண்டு தொண்டு நிறுவன பணி செய்வதற்கும், கூட்டமைப்பு செய்யும் அரசியலுக்கும் என்ன வித்தியாசத்தைப் பார்க்க முடியும்?

## பேரம்பேசும் சக்தி எனும் சொல்

நம் எதிர்த்தரப்பிடம் இருக்கும் ஒன்றை, நம்மிடமிருக்கும் பலமான ஒன்றை வைத்துப் பெறுவதற்காக முயற்சித்தலே பேரம்பேசுதல் ஆகும். அதாவது, "நான் இதைத்தாறன், நீ அதைத் தா" என்பதுதான். 2010க்குப் பின்னர் தமிழர்களிடம் இருக்கும் பேரம்பேசும் சக்திக்கான பொருள் வாக்குச் சீட்டுக்கள்தான். தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழர்களின் வாக்குகளைப் பெற்று அதிக உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதன் மூலமாக ஒருவகை பேரம்பேசுதலையும், ஜனாதிபதி தேர்தலின்போது தமிழர்களின் வாக்குகளைத் திரட்டி சிங்களத் தலைமைகளுக்குத் தாரைவார்க்கும்போது ஒரு வகை பேரம்பேசுதலையும் கைக்கொள்வது வழமை. வடக்கு கிழக்கிலிருந்து அதிகளவான உறுப்பினர்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்றத்துக்கு தமிழர்கள் அனுப்பிய போதும், ஆள்பலத்தை வைத்து ஏதாவது பேரம்பேசல் இதுவரையில் இடம்பெற்றுள்ளதா? இல்லை.

இரண்டாவது, ஜனாதிபதிதேர்தலின்போது தமிழர்களின் வாக்குகளைத் திரட்டி சிங்கள ஆட்சியாளர் ஒருவருக்கு கொடுத்துப் பேரம்பேசுவது. இது ராஜபக்ஷ வின் காலத்தில் சாத்தியமாகவில்லை. ஆனால், கடந்த ஆட்சி மாற்றத்தின்போது அருமையானதொரு அரசியல் சந்தர்ப்பம், தமிழ் மக்களின் வாக்குகளை முன்வைத்துப் பேரம்பேசுவதற்குக் கிடைத்தது. மைத்திரியா? மஹிந்தவா? என்ற போட்டி வருகையில் இரு தரப்பினருக்குமே தமிழர்களின் வாக்குகள் அவசியப்பட்டன. அதனை இருவரும் வெளிப்படையாகவே கூறினார்கள். ஆனால், தமிழ் தேசிய கூட்டமைப்பு எவ்வித பேரம்பேசலையும் மேற்கொள்ளாது மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து, வாக்கு வீணடிப்பைச் செய்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழர் அரசியலில் செய்த தவறுகளுல் மிகப் பிரதானமானதாக இதைத்தான் குறிப்பிடலாம்.

## புலிகள் தொடர்பிலான கூட்டமைப்பின் நிலைப்பாடு

இப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற எவருமே விடுதலைப் புலிகளை ஆதரித்தவர்களோ, அவர்களின் கொள்கைகளின் மீது விசுவாசம் கொண்டவர்களோ அல்ல. நாடாளுமன்றத்தில் புலிப் பயங்கரவாதி எனத் தூற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள், தேர்தல் காலங்கள் வந்ததும் விடுதலைப் புலி வீரர்கள், விடுதலைப் போராளிகள் எனப் புகழ்பாடத் தொடங்கிவிடுவர். தேர்தலில் வெற்றி பெற்றதும் புலிகளும், அவர்களின் தலைவர் பிரபாகரனும் பயங்கரவாதிகளாகிவிடுவர். தமிழ் தேசிய கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், விடுதலைப் புலிகள் மற்றும் பிரபாகரன் ஆகிய சொற்கள் வாக்குகளை அள்ளிக் குவிக்கும் அட்சய பாத்திரங்கள் மாத்திரமே. தேர்தல் காலங்களில் மட்டும் மிணுக்கி எடுத்தால் போதும்.

தமிழர் அரசியலில் இவ்வளவு பாடுபாதங்களையும் செய்துவிட்டு, இம்முறை மறுபடியும், தேர்தல் களத்தில் கூட்டமைப்பு இறங்கியிருக்கிறது. அதிகளவான குழறுபடிகள், குழிபறிப்புக்கள், தமக்கிடையே போட்டுக்கொடுத்தல்கள், ஆசனத்துக்கான பரிமாறல்கள் என தேர்தல் கல்லாப்பெட்டி சலசலக்கிறது. இம்முறையும் அனேக புதுமுகங்கள். அதுவும் வியாபாரம், பாரியதொழில்வைத்துநடத்துபவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் தேசியம் வியாபாரிகளின் கைகளுக்குப் போனால் என்ன நடக்கும் என்பதைக் கடந்த ஐந்து வருடத்தில் பார்த்துவிட்டோம். அதற்கு உதாரணமான புருஸர்கள் கூட்டமைப்பில் ஏற்கனவே இருக்கின்றனர். எனவே, அடுத்து வரும் ஐந்து வருடங்களுக்குத் தமிழ் தேசியம் பாரியளவிலான வியாபாரப் பண்டமாக மாறப்போகின்றது. தமிழ் தேசியம் மாபியாக்களின், வணிக கொள்ளையர்களின் உறைவிடமாக வடிவம் எடுக்கப்போகின்றது. அந்தக் கொள்ளையர்களைப் பாதுகாக்கும் சிவப்பு - மஞ்சள் குடையாகத் தமிழ் தேசிய கூட்டமைப்பு தன்னை மாற்றிக்கொள்ளப்போகிறது.

சுழியோடி

# உலகில் பலம்வாய்ந்த இயக்கமாக 1990–2009 வரை விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர் – ஐ.நா. அறிக்கை

**கடந்தவார தொடர்ச்சி...**

ஒரு (10) ஆவணத்தை "கண்டிப்பான இரகசியத்தன்மை' என வகைப்படுத்தி அதற்கான பிரவேசத்தை 20 வருட காலத்துக்கு மட்டுப்படுத்துவதோடு அதனைத் தொடர்ந்தும் தடுத்து வைத்தல் அல்லது வெளியிடுதல் தொடர்பான நியாயம் பற்றிய மீளாய்வொன்றை மேற்கொள்ளலாம் என்பதற்கான ஏற்பாட்டினை இவ்வறிக்கை விளக்குகிறது. மேலும், குழுவின் நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் மற்றும் தோதானவிடத்து, பின்னர் பிரயோகிப்பது தொடர்பான கண்டிப்பான இரகசியத்தன்மை பற்றிய உறுதிப்பாட்டினை குழு வழங்கலாம் என்பதை சட்ட விவகாரங்கள் அலுவலகங்கள் உறுதிப்படுத்தியது. இதன் விளைவாக, குழுவின் பொருள் செறிந்த பதிவுகள் கிட்டத்தட்ட முழுமையாக "கண்டிப்பான இரகசியத்தன்மை' எனவும், சில விடயங்கள் தொடர்பாக எதிர்கால பாவனை பற்றிய மேலதிகப் பாதுகாப்புடனும் வகைப்படுத்தப்படும்.

மோதலுக்கான வரலாற்று ரீதியிலான மற்றும் அரசியல் பின்னணி

24. கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்கள் நடைபெற்று வந்த மூர்க்கத்தனமான மோதலின் பின்னர், 2009 மே 19ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ) மீதான அதன் வெற்றியை இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தியது. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது சர்வதேச மனிதாபிமான மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்கள் பற்றிய ஏராளமான குற்றச்சாட்டுக்கள் விடுக்கப்பட்டதோடு, அவை பற்றி செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவது குழுவுக்குப் பொறுப்பு சாட்டப்பட்டது. இலங்கையின் சிக்கலான மற்றும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட அரசியல் வரலாற்றினை கூறுபடுத்தி ஆராய்வது குழுவின் பணியல்ல. இருந்த போதிலும், யுத்தத்தின் இறுதிக் கட்டங்களை தோதான அரசியல் மற்றும் சமூகப் பின்னணியின் கண்ணோட்டத்தில் ஆராய்வதற்காக, மோதலின் வரலாற்றின் சில அம்சங்களை கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என குழு கண்டது.

25. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு இந்தியாவின் தென் கிழக்குக் கரைக்கு 18 மைல்களுக்கு அப்பால் இந்திய சமுத்திரத்தில் உள்ள தீவு தேசமாகும். இலங்கை 21 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட இனத்துவ, மொழிவாரியான அத்துடன் சமயம் தொடர்பான பன்முகத் தன்மையுடையதொரு நாடு என்பதோடு, அதில் 74 சதவீதத்தினர் அதிகமாக பௌத்தர்களை உள்ளடக்கிய சிங்கள மொழி பேசும் சிங்களவர்களாகவும், 18 சதவீதத்தினர் அநேகமாக இந்துக்களான தமிழ் மொழியைப் பேசும் தமிழர்களாகவும் (இலங்கைத் தமிழர் மற்றும் இந்திய தமிழர்கள் என முறையே 13 சதவீதத்தையும் 5 சதவீதத்தையும் உள்ளடக்கியதாக), மற்றும் 7 சதவீதத்தினர் இஸ்லாம் மதத்தை அனுஷ்டிக்கும் பொதுவாகத் தமிழ் மொழியைப் பேசும் சோனகர்கள் மற்றும் மலேயர்களைக் கொண்ட முஸ்லிம்களாகவும் மற்றும் 1 சதவீதத்தினர் ஏனையவர்களுள் பறங்கியர் மற்றும் ஆதிவாசிகளைக் கொண்ட சிறிய இனத்துவச் சமூகங்களைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். சில சமூகங்களில் சிறிய வீதத்தினராக கிறிஸ்தவர்கள் உள்ளனர்.

26. முதலில் போர்த்துக்கேயர், அடுத்து ஒல்லாந்தர் மற்றும் இறுதியாக பிரித்தானியர்களின் 4 நூற்றாண்டுகள் தொடர்ந்த காலனித்துவ ஆட்சிக்குப் பின்னர். பிரித்தானியாவிடம் இருந்து 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரத்துக்குப் பின்னர் பல்வேறு இனத்துவச் சமூகங்களை உள்ளடக்கியதாகச் சிங்களவர் ஆதிக்கம் செலுத்தும் சிங்களப் பெரும்பான்மையைக் கொண்ட அரசாங்கம் இலங்கையை ஆட்சி செய்து வந்தது. சகலருக்குமான வாக்குரிமை, பல்கட்சி அமைப்பு மற்றும் துடிப்பானதொரு தேர்தல் செயற்பாடு, அத்துடன் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு சாராருக்குமான உயர் நிலையிலான எழுத்தறிவு, குறைந்த சிசு மரண வீதம் போன்ற முக்கியமான மனித அபிவிருத்திச் சித்திகள் ஆகியவற்றை உள்ளிட்ட உறுதியான ஜனநாயகச் சுட்டிகளை இலங்கையின் நீண்ட கால யுத்தம் பற்றிய வரலாற்றுடன் தெளிவாக ஒப்பிடக் கூடியதாகவுள்ளது (11) அ. இனத்துவமும் அரசியலும்

27. அரசியல் மற்றும் இனத்துவக் கோடுகளூடான ஆழமானதொரு விரிசலின் வன்முறைப் பிரதிபலிப்பாக இலங்கையின் ஆயுதந் தாங்கிய மோதல் இருந்துள்ளது.
1. இனத்துவம் சார்ந்த தேசியவாதத்தின் தோற்றம்

28. சுதந்திரத்தின் பின், அரசியல் பிரமுகர்கள் குறுகிய கால அரசியல் இலாபங்களுக்கு முன்னுரிமை வழங்கி, நீண்ட கால கொள்கைகளுக்கு மேலாக சமுதாயம் சார்ந்த அத்துடன் இனத்துவ வாத மன உணர்ச்சிகளை கவர்வதற்கான ஒரு போக்கினைக் கொண்டிருந்தனர். நீண்ட கால கொள்கைகள் பிரஜைகளின் பல்கலாசார இயல்பினைப் போதியளவு பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சகலரையும் உள்ளிட்டதொரு நாட்டைக் கட்டியெழுப்பியிருக்கலாம். இத்தகைய செயற்பாடு மற்றும் பிரிவுகள் காரணமாக ஒருமைப்படுத்தும் தேசிய தனித்தன்மை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில், சிங்களபௌத்த



தேசியவாதம் செயற்பட ஆரம்பித்தது, பௌத்த மதத்தின் பரிசுத்த இல்லமாகிய இலங்கையின் பாதுகாப்பாளர்கள் என்பதாக சிங்களவர்களுக்கு தனிச்சிறப்பினைக் கொண்டதொரு தன்மையை வலியுறுத்தியது. இக்காரணிகள் இலங்கையில் நாடு, அரசாட்சி மற்றும் இனங்களுக்கிடையிலான தொடர்புகளைப் பாழாக்கி நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தியது.

29. 1970ஆம் ஆண்டுகளில், ஒரு புறம் வகுப்பு அடிப்படையிலான ஓரங்கட்டலால் விரக்தியடைந்த தெற்கின் இளம் சிங்களவர்கள் மற்றும் இனத்துவ அடிப்படையிலான ஓரங்கட்டலால் விரக்தியடைந்த வடக்கைச் சேர்ந்த இளம் தமிழர்கள் மறு பக்கம் உருவாகி வரும் நாடு சம்பந்தப்பட்ட வகையில் வெவ்வேறு விதமான எதிர்ச்செயலில் ஈடுபட்டு, தீவிரவாதத்தின் பக்கம் திரும்பி, அரசுக்கு எதிரான ஆயுதந்தாங்கிய புரட்சிகளில் ஈடுபட்டனர். அரசாங்கம் இவ்வியக்கங்களை தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தலாகக் கணித்து, அடிப்படையான அரசியல் சிக்கல்களைத் தீர்ப்பதை விடுத்து, அரச அதிகாரத்துக்கு எதிரான சவால்களான காணாமல்போதல்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் மற்றும் சித்திரவதை உள்ளிட்ட அடக்குமுறையினைக் கொண்டு எதிர்கொண்டது.

30. வேறுபாடு காட்டும் அரசாங்கக் கொள்கைகள் மற்றும் 1950ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிரான கலவரம் ஆகியவற்றைத் தொடர்ந்து, காந்தியின் அகிம்சா வழியைப் பின்பற்றி ஆரம்பித்த உரிமைகளுக்கான தமிழ் போராட்டம், தனி நாடு என்ற கோரிக்கையை மையமாகக் கொண்டு மேலும் மேலும் தமிழ் தீவிரவாதம் மற்றும் ஆயுதம் ஏந்திய புரட்சியை தோற்றுவித்தது. ஒத்துப்போவதில் இருந்து பிரிவினை வாதத்துக்கு கலந்துரையாடல் மாறியபோது, 1970ஆம் ஆண்டுகளில் எல்.ரி.ரி.ஈ. உள்ளிட்ட பல தமிழ் அரசியல்தீவிரவாதக் குழுக்கள் தோன்றின. ஆயுதந்தாங்கிய தமிழ் குழுக்கள் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக மேற்கொண்ட தாக்குதல்களுக்குச் சமாந்தரமாக சிங்கள தேசியவாதிகள் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட கடுமையான அடக்கு முறை தீவிரமடைந்தது. 1977, 1979, 1981 மற்றும் 1983 இல் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை அரசாங்கத்தில் இருந்த சில சக்திகள் உற்சாகப்படுத்தின அல்லது சில சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு அனுசரணை வழங்கின. இந்த வன்முறை 1983இல் ஆகப் பரவலாக நடைபெற்ற தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களின் உச்ச நிலையை அடைந்தது. அரசாங்கத்துக்குச் சொந்தமான பேருந்துகளில் சிங்களக் கும்பல்கள் போக்குவரத்துச் செய்யப்பட்டதோடு தமிழர்களை இனங்கண்டு அவர்களை இலக்குப் பார்ப்பதற்காக உத்தியோகபூர்வமான வாக்காளர் பதிவேடுகள் பிரயோகிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்ததோடு பாரிய அளவில் இடம் பெயர்வு, தமிழர்களின் சொத்துக்களுக்கான சேதம் அத்துடன் தமிழர்களின் புலம்பெயர்வு நேர்ந்தது. வடக்கு மாகாணமான யாழ்ப்பாணத்தில்

13 இலங்கை இராணுவ வீரர்களை எல்.ரி.ரி.ஈ. கொலை செய்ததற்குப் பதிலாக இத்தாக்குதல்கள் நடைபெற்றதாக அரசாங்கம் உறுதியாகக் கூறியது. இவ்வாறாக, 1983ஆம் ஆண்டுக்கு முன்னர் இரு தரப்பினருக்கிடையிலான வன்செயல்கள் நேர்ந்த போதிலும், அரசாங்கத்துக்கும் எல்.ரி.ரி.ஈ. இனருக்கும் இடையிலான யுத்தத்தின் ஆரம்பம் 1983 எனப் பொதுவாகக் கருதப்படுகிறது.
2. தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ)

31. 1983ஆம் ஆண்டின் இனக் கலவரங்களுக்குப் பின்னர் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை மும்முரமடைந்த போது, தமிழ் சமூகமும் மேலும் தீவிரவாதத்தில் ஆழ்ந்து, தமிழ் நாட்டில் பயிற்சி மற்றும் அமைப்புக்கு ஏதுவான சூழலைப் பிரயோசனப் படுத்தியதோடு, தீவிரவாதக் குழுக்களின் அணிகளும் அதிகரித்தன.

தொடரும்...

சுழியோடி




## தற்போதைய நிலையில் ஆசிரியர்களுக்கு பெரிதும் உதவும் Whatsapp Broadcast வசதி

கொரோன வைரஸ் பரவாமல் இருப்பதற்காக ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் மக்களை வீட்டிலேயே இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்களும் வீட்டில் இருப்பதுடன் அவர்களது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பல்வேறு வழிமுறைகள் உருவாக்கி கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஆசிரியர்கள் வட்ஸ் அப் குழுக்கள் உருவாக்க அதில் மாணவர்களின் பெற்றோர்களின் வட்ஸ் அப் இலக்கங்களை சேர்த்து விடுமுறைகால பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

எனினும் இது பாதுகாப்பு அற்றதாக அனேகமான பெற்றோர்கள் கருதுகின்றனர்.

காரணம் மொபைல் இலக்கங்களை மாணவர்கள் தவறாகப் பயன்படுத்துவதற்குரிய சாத்தியங்கள் இருக்கின்றமையாகும்.

எனவே இதனை தவிர்ப்பதற்கு Whatsapp Broadcast வசதியினை ஆசிரியர்கள் பயன்படுத்த முடியும்.

இதன் மூலம் சாதாரண வட்ஸ் அப் குழு போன்றே பலருக்கு தகவல்களை பரிமாற்றக்கூடியதாக இருக்கின்றபோதிலும் அக் குழுவில் உள்ளவர்கள் ஏனையவர்களின் தொலைபேசி இலக்கங்களை பார்வையிட முடியாது. எனவே இது பாதுகாப்பானதாகும்.

இவ் வசதியினை செயற்படுத்துவதற்கு வட்ஸ் அப்பில் வலது பக்க மேல் மூலையில் காணப்படும் மூன்று புள்ளிகள் இருக்கும் பகுதியை அழுத்த வேண்டும்.

தோன்றும் மெனுவில் New Broadcast என்பதை கிளிக் செய்து குழுவில் இணைக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்களை தெரிவு செய்து பயன்படுத்த முடியும்.




## மொபைல் இன்டர்னெட் பாவனையில் ஏற்பட்ட அதிகரிப்பு

கொரோனா பரவலில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு பல்வேறு நாடுகள் LockDown Kiwia அறிமுகம் செய்துள்ளன.

இதன்காரணமாக மக்கள் வீடுகளிலேயே முடங்கியிருக்கின்றனர்.

இந்நிலையில் தற்போது வழமையை விடவும் மொபைல் இணைய பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 10 சதவீதத்தினால் மொபைல் இணையப்பாவனை அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

டெல்லி மற்றும் மும்பை போன்ற நகரங்களில் அதிகரிப்பு குறைவாக இருக்கின்ற போதிலும் கிராமப்புறங்களில் 20 சதவீதம் வரையான அதிகரிப்பு காணப்படுகின்றது.

இந்நிலையிலேயே ஒட்டுமொத்த இந்தியாவில் சராசரியாக 10 சதவீதத்தினால் மொபைல் இணையப் பாவனை அதிகரித்துள்ளது.

## நாசா விண்வெளி வீரராக பணியாற்ற ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள்

புதிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கான திட்டத்தில் விண்வெளி வீரர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பத்தினை நாசா விண்வெளி ஆய்வு மையம் கோரியிருந்தது.

இதற்காக சுமார் 12,000 பேர் விண்ணப்பித்துள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் இரண்டாம் திகதி முதல் 31 திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையிலேயே இவ்வளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக நாசா தெரிவித்துள்ளது.

இதில் தெரிவு செய்யப்படுபவர்கள் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள நிலவு மற்றும் செவ்வாய் கிரகங்கள் தொடர்பான ஆய்வுகளின்போது தமக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நாசா குறிப்பிட்டுள்ளது.

மேலும் இவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்வெளி வீரர்களை 2021 ஆம் ஆண்டு கோடை காலப் பகுதியில் அறிமுகம் செய்து வைப்பதற்கும் நாசா திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பிளாஸ்டிக்கினை மீள்சுழற்சி செய்வது தொடர்பில் வெளியான மகிழ்ச்சியான தகவல்

உலகின் பல்வேறு நாடுகளில் சூழல் மாசடைவதற்கு பிரதான காரணங்களுள் ஒன்றாக பிளாஸ்டிக் பொருட்கள் காணப்படுகின்றன.

இன்று பல இலட்சம் தொன் கணக்கில் ஆங்காங்கே வீசப்பட்டிருக்கும் பிளாஸ்டிக்கினை அழிப்பது மிகப்பெரும் சவாலாகவே காணப்படுகின்றன.



இந்நிலையில் எந்தவொரு கடினமான பிளாஸ்டிக்கினையும் மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதற்கான வழிமுறை ஒன்றினை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அதாவது Pseudomonas எனும் இனத்தைச் சேர்ந்தபக்டீரியாவினைப்பயன்படுத்தி இலகுவாக பிளாஸ்டிக்கினை மீள்சுழற்சிக்கு உட்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பக்டீரியாவில் இருந்து வெளிவிடப்படும் இரசாயனப் பதார்த்தத்தின் சேர்வையானது பிளாஸ்டிக் பொருட்களை சிதைவடையச் செய்து கார்பன், நைட்ரஜன் மற்றும் சக்தியாக மாற்றக்கூடியது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

ஜேர்மனியில் உள்ள ஆராய்ச்சியாளர் குழு ஒன்றே இப் பொறிமுறையினை வெற்றிகரமாகப் பரிசீலித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உன் அறிவு அடுத்தவர்களுக்கு உதவும் போது அறிவியல் ஆகிறது...**
**அது உனக்கு மட்டுமே உதவும் போது ஆணவமாகிறது...**
**உன் அறிவால் உன்னை தேடும் போது**
**ஆன்மீகம் ஆகிறது...!!**

# விளையாட்டு செய்திகள்

## டோனி லீவிஸின் மறைவிற்கு இரங்கல் வெளியிட்டது இங்கிலாந்து கிரிக்கெட் சபை!

டக்வொர்த் லீவிஸ் முறையை உருவாக்கியவர்களில் ஒருவரான இங்கிலாந்தை சேர்ந்த டோனி லீவிஸ் உயிரிழந்துள்ளார்.

தனது 78 வயதில் உயிரிழந்த அவருக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை இரங்கல் தெரிவித்துள்ளது.

ஒருநாள் கிரிக்கெட்டில் மழை காரணமாக போட்டிகள் பாதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் டக்வொர்த் லீவிஸ் விதிமுறைப்படி 2 ஆவதாக துடுப்பெடுத்தாடும் அணிக்கு புதிய வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்படும்.

சிக்கலான இந்த வெற்றி இலக்கு கணக்கீட்டு முறையை கணிதவியல் நிபுணர்கள் பிராங்க் டக்வொர்த். டோனி லீவிஸ் ஆகியோர் இணைந்து உருவாக்கினார்கள்.

1997 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த டக்வொர்த் லீவிஸ் விதிமுறையை 1999 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டது.

தற்போது 20 ஓவர் கிரிக்கெட் போட்டியிலும் இந்த விதிமுறை பின்பற்றப்படுகிறது.

2014 ஆம் ஆண்டில் கணிதவியலாளர் ஸ்டீவன் ஸ்டெர்ன் என்பவரால் நவீன கிரிக்கெட்டுக்கு ஏற்ப இந்த விதிமுறையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



## கொரோனா - இங்கிலாந்து கிரிக்கட் சபை நிதியுதவி

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவுவதற்காக இங்கிலாந்து கிரிக்கட் சபை நிதியுதவி தொகையை அறிவித்துள்ளது.

இங்கிலாந்து கிரிக்கட் சபையின் தலைமை நிர்வாகி டொம் ஹெரிஷன் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய, இங்கிலாந்தின் அனைத்து வகையான கிரிக்கட்டுக்காக 61 மில்லியன் பவுண்ஸ் பெறுமதியான நிதி உதவி தொகையை அவர் அறிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற இங்கிலாந்து கிரிக்கட் சபையின் கூட்டத்தில் இந்த நிதி உதவிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.




## அனைத்து சம்பியன்ஸ் லீக் போட்டிகளும் ஒத்திவைப்பு!

கொரோனா தொற்று காரணமாக ஐரோப்பிய லீக் போட்டிகள் உட்பட அனைத்து சம்பியன்ஸ் லீக் போட்டிகளும் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஐரோப்பிய காற்பந்து சங்கங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நடத்தப்படும் யூரோ 2020 இற்கான பிளேஒப் போட்டிகள் ஏற்கனவே 2021 ஆம் ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் 2021 ஆண்டு இடம்பெறவிருந்த மகளிர் யூரோ கிண்ணத்தற்கான தகுதிப் போட்டிகள் உட்பட ஜூன் மாதத்தில் நடைபெறவிருந்த அனைத்து போட்டிகளும் மறு அறிவித்தல் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.




## விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் இரத்து

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற போட்டிகளில் மிக உயரியதான 134 ஆவது விம்பிள்டன் டென்னிஸ் தொடர் ஜூன் 29 முதல் ஜூலை 12 ஆம் திகதி வரை லண்டனில் இடம்பெறவிருந்தது.



எனினும் கொரோனா வைரஸ் தொற்று பிரிட்டனில் வேகமாக பரவுவதால் வீரர்கள், ரசிகர்கள் உள்ளிட்டோரின் நலனை கருத்தில் கொண்டு விம்பிள்டன் போட்டிகளை இரத்து செய்வதாக பிரிட்டன் டென்னிஸ் கழகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

நூற்றாண்டுகால பழமைவாய்ந்த விம்பிள்டன் டென்னிஸ் போட்டி இதற்கு முன்பு முதலாவது மற்றும் 2 ஆவது உலகப்போரின் போது இரத்து செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவைக் கட்டுப்படுத்த நன்கொடை வழங்கினார் நோவக் ஜோகோவிச்

உலகின் முதற்தர டென்னிஸ் வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக நன்கொடை அளித்துள்ளார்.

இதற்கமைய அவர் 1.1 மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

செர்பியாவையும் பாதிக்கும் கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடுவதற்கு மருத்துவ உபகரணங்கள் மருந்து வகைகளை பெற்றுக்கொள்வதற்காக அவர் குறித்த நிதியுதவியை வழங்கியுள்ளார்.



# உலக செய்திகள்

## 50 ஆயிரத்தை கடந்த பலி எண்ணிக்கை –அதிரும் உலக நாடுகள்



உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 50 ஆயிரத்தை கடந்துள்ளது. 50 ஆயிரத்தை கடந்த பலி எண்ணிக்கை - அதிரும் உலக நாடுகள் கொரோனாவால் உயிரிழந்தவரை அடக்கம் செய்த காட்சி சீனாவில் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் பரவி வருகிறது. உலகம் முழுவதும் 204 நாடுகளுக்கு பரவியுள்ள வைரஸ் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இந்நிலையில், கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 50 ஆயிரத்தை கடந்துள்ளது.தற்போதைய நிலவரப்படி, உலகம் முழுவதும் 10 லட்சத்து 940 பேருக்கு வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் பரவியவர்களில் 7 லட்சத்து 39 ஆயிரத்து 321 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.சிகிச்சை பெறுபவர்களில் 37 ஆயிரத்து 702 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

வைரஸ் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் 51 ஆயிரத்து 375 பேர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 2 லட்சத்து 10 ஆயிரத்து 244 பேர் குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனாவுக்கு அதிக உயிரிழப்புகளை சந்தித்த நாடுகள் பின்வருமாறு:-
அமெரிக்கா - 5,624 ,இத்தாலி - 13,915,ஸ்பெயின் - 10,096,ஜெர்மனி - 1,089, சீனா - 3,318,பிரான்ஸ் - 4,503,ஈரான் - 3,160,இங்கிலாந்து - 2,921, சுவிஸ்சர்லாந்து -536,துருக்கி -356,பெல்ஜியம் - 1,011,நெதர்லாந்து - 1,339,கனடா- 134, ஆஸ்திரியா - 158,தென்கொரியா - 169,போர்ச்சுகல் - 209,பிரேசில் - 252,ஸ்வீடன் - 282,டென்மார்க் - 123,ஈக்வடார் - 120,ருமெனியா - 114,பிலிப்பைன்ஸ் - 107,இந்தோனேசியா - 170

## கொரோனா வைரஸ் தாக்கம்: 6 மாதங்களுக்கு முடக்க தயாராகும் பிரிட்டன்



கொரோனா வைரஸ் தாக்கம் தீவிரமாக பரவிவரும் நிலையில் பிரித்தானியாவை 06 மாதங்கள் முடக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் தாக்கம் பிரித்தானியாவையும் விட்டுவைக்கக்கவில்லை அங்கு இதுவரை 41 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திற்குள்ளான நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாட்டில் கொரோனா வைரஸினால் நிலைமைகள் மேலும் மோசமடையலாம் என சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

பிரித்தானியாவில் இதுவரை 41,903 கொரோனா வைரஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 4,313 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் 3 இலட்சத்து 11 ஆயிரத்து 635 பேர் பாதிப்பு!



சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் ஐரோப்பிய நாடுகளை தொடர்ந்து, தற்போது அமெரிக்காவில் அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்றால் 3 இலட்சத்து 11 ஆயிரத்து 635 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 8000 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

நியூயோர்க்கில் மட்டும் ஒரே நாளில் 630 பேர் உயிரிழந்துள்ளதை அடுத்து, அந்த மாகாணத்தில் மட்டும் இறந்தவர்களின் எண்ணிக்கை 3,565 ஆக உயர்ந்துள்ளது.இதேவேளை, இரண்டு வாரங்களில் வைரஸ் தொற்று அதிகமாகப் பரவ வாய்ப்பு உள்ளது என நியூயோர்க் ஆளுநர் ஆன்ட்ரு கோமோ தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில் ஸ்பெயின் நாடும் உள்ளது. சர்வதேச அளவில் இத்தாலிக்கு அடுத்து ஸ்பெயினில்தான் அதிகளவிலான கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளது.

இதேவேளை நாட்டில் மட்டும் 11,947 பேர் உயிரிழந்துள்ளனர். உலகம் முழுவதும் 1,202,433 பேருக்கு கொரோனா பரவியுள்ளதுடன், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 64,729 பேர் உயிரிழந்துள்ளனர்.வைரஸ் பரவிய 246,638 பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவிற்கு மருந்து கண்டுபிடிப்பு: எலியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வெற்றி

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை அமெரிக்காவில் உள்ள Pittsburgh மருத்துவ பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதாகவும் எலியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வெற்றி கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.பேராசிரியர் ஆன்ட்ரியோ கம்போட்டா (Andrea Gambotto), லூயிஸ் ஃபாலோ உள்ளிட்டவர்கள் தலைமையிலான நிபுணர்கள் குழு இந்த மருந்தை உருவாக்கியுள்ளது.

இதே குழுவினர் 2003 ஆம் ஆண்டு சார்ஸ் நோய்க்கும் 2014 ஆம் ஆண்டு மெர்ஸ் நோய்க்கும் மருந்து கண்டுபிடித்தனர்.

தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் சார்ஸ் மற்றும் மெர்ஸ் குடும்பத்தை சேர்ந்ததாகும். எனவே, கடந்த கால மருந்து கண்டுபிடிப்பு முறையிலேயே நிபுணர்கள் குழு கொரோனாவிற்கும் மருந்து கண்டுபிடிக்க ஆய்வு நடத்தியது. அதில் அவர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

இந்த தடுப்பு மருந்தை எலிக்கு செலுத்தி பரிசோதித்துள்ளனர். அது வெற்றிகரமாக செயற்படுகிறது. அதாவது உடலில் கொரோனா வைரஸ் கிருமியை எதிர்த்து போராடும் ஆற்றலை உருவாக்கி அதை அழிக்கிறது. எனவே, இந்த மருந்தை மனிதனுக்கு பயன்படுத்தினால் நோய் தாக்குதலை தடுத்து விடலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

ஆனாலும், இன்னும் சில பரிசோதனைகள் நடத்த வேண்டியுள்ளது. முதலில் இந்த மருந்திற்கு அமெரிக்க உணவு மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு, புதிய மருந்து ஆய்வு அமைப்பு ஆகியவற்றின் ஒப்புதலை பெற வேண்டும்.இதற்காக விண்ணப்பிக்கும் பணியில் ஆய்வுக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். அதன் ஒப்புதல் கிடைத்த பிறகு மனிதர்களுக்கு சோதனை நடத்தப்படும். அதுவும் வெற்றி பெற்றால் தடுப்பூசி பயன்பாட்டிற்கு வரும்.ஆனாலும், அனைத்து பணிகளும் முடிந்து பயன்பாட்டிற்கு வருவதற்கு இன்னும் ஒரு வருட காலம் வரை ஆகலாம் என நிபுணர் குழுவினர் கூறியுள்ளனர்.



# கொரோனா COVID _ - 19
## இலங்கையின் இன்றைய நிலைமை அறிக்கை

2020.04.05

நோய்த்தொற்று சந்தேகத்தில்
273

தொற்றுக்கு உள்ளானவர்கள்
166

குணமடைந்தவர்கள்
027

மரணமடைந்தவர்கள்
005

உலகனவில் தொற்றுக்குள்ளானவர்கள்
1,199,064

உலகளவில் குணமடைந்தவர்கள்
246,166

உலகளவில் மரணமடைந்தவர்கள்
64,650

நேற்றைய தினம் பதிவான அதிகூடிய உயிரிழப்பு -
பிரான்ஸ் - 1,053

## தலை வணங்க வேண்டும் இவர்களுடைய பணிக்காக..















இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 05.04.2020 அன்று வெளியிடப்பட்டது.